Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 15 (06.05.2004) வியாழக்கிழமை இதழ்:217

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | SM வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி, காரைநகர்.
T.P: 060 2212472
(சி/2201)

# விட்ட இடத்திலிருந்து பேச்சை ஆரம்பித்தால்

# ஐக்கிய தேசியக் கட்சி பூரண ஆதரவு தரும்!

## சொல்ஹெய்மிடம் ரணில் உறுதியளிப்பு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நடத்திய பேச்சுக்கள், விடப்பட்ட இடத்திலிருந்து புதிய அரசாங்கம் சமாதான முயற்சிகளை ஆரம்பித்தால் தமது கட்சி பூரண ஆதரவை வழங்கும் என்று எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க எரிக் சொல்ஹெய்மிடம் உறுதியளித்துள்ளார்.**

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியபோதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டது. இந்தச் சந்திப்பு நேற்றுக்காலை 10.30 மணியளவில் உத்தியோகபூர்வ சந்திப்பாக இடம்பெற்றது.

ரணில் விக்கிரமசிங்கவுடனான இச் சந்திப்பில், ஜனாதிபதி சந்திரிகா, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற (12 ஆம் பக்கம்

## யாழ். சிறையிலிருந்த 21 கைதிகள் விடுதலை!

(யாழ்ப்பாணம்)

வெசாக் பண்டிகை தினத்தை முன்னிட்டு சிறைக் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் யாழ்.சிறைச்சாலையில் இருந்தும் 21 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதையொட்டி, மேற்படி சிறைக் கைதிகளின் பெருமளவு உறவினர்கள் யாழ்.சிறைச்சாலை வாயிலில் குழுமி நின்றனர். விடுதலை செய்யப்பட்ட 21 கைதிகளில் 15 ஆண்களும் 6 பெண்களும் அடங்குகின்றனர்.

விடுதலை செய்யப்பட்டவர்கள் கசிப்பு, சிறு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் காணாமற்போன ஆசிரியரின் சடலம் மீட்பு!

### புங்குடுதீவில் கரையொதுங்கியது

(யாழ்ப்பாணம்)

படகில் பயணம் செய்துகொண்டிருந்தபோது நெடுந்தீவுக் கடலில் காற்றினால் தூக்கி கடலில் வீசப்பட்டு காணாமற்போன இரத்தினம் ஜெயசீலன் என்ற ஆசிரியரின் சடலம் நேற்று புங்குடுதீவில் கரை ஒதுங்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவுப் பகுதிக்குச் சென்று திரும்பி வரும்போது படகிலிருந்து காற்றினால் தூக்கியெறியப்பட்ட யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியரின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கிய குடும்பஸ்தர் படுகாயம்!

### அளவெட்டிப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி புதைக்கப்பட்டிருந்த காணியை

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# குறைப் பிரசவ குழந்தை கழிப்பறையிலிருந்து மீட்பு!

## பெற்றெடுத்த சிறுமி தப்பியோட்டம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள மலசலகூடம் ஒன்றில் இருந்து இறந்த நிலையில் குறைமாதக் சிசு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது. மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது-

பதினாறு வயது நிரம்பிய சிறுமி ஒருவர் தனது பேத்தியாருடன் வந்து வயிற்றுவலிக்கு சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

இதன் பின்னர் மருத்துவர்களின் பரிசோதனைகளின்போது சிறுமி கர்ப்பமாக இருப்பது

## சொல்ஹெய்முக்கு விரைவில் திருமணம்!

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் நோர்வே நாட்டின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிற்கு விரைவில் திருமணம் நடைபெறவுள்ளது.

சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்காக கடந்தவாரம் கொழும்பு வந்த சொல்ஹெய்ம் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இதையடுத்து, புதுடெல்கி வழியாக சொல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சிப்பாய் தாக்கி தமிழர்கள் இருவர் காயம்!

### திருகோணமலையில் சம்பவம்

(திருகோணமலை)

திருகோணமலை - உவர்மலை பிரதேசத்தில் இராணுவச் சிப்பாய் தாக்கியதில் தமிழர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு தனிப்பட்ட குரோதமே காரணமென உவர்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இராணுவச் சிப்பாயோடு தமிழர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கமரா கொண்டுசெல்ல தீவகத்தில் தடையில்லை!

### கடற்படைப் பேச்சாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

## குடும்பஸ்தர் படுகாயம்!

### அளவெட்டிப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி புதைக்கப்பட்டிருந்த காணியை துப்பரவு செய்த குடும்பஸ்தர் ஒருவர் மிதி வெடியில் சிக்கி தனது காலை இழந்தார்.

இந்தச் சம்பவம் அளவெட்டிப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது - அளவெட்டி வடக்குப் பகுதியில் இராணு

(12 ஆம் பக்கம் பார்க்க)

நிலையில் குறைமாதச் சிசு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது. மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது-

பதினாறு வயது நிரம்பிய சிறுமி ஒருவர் தனது பேத்தியாருடன் வந்து வயிற்றுவலிக்கு சிகிச்சைக்கென யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

இதன் பின்னர் மருத்துவர்களின் பரிசோதனைகளின்போது சிறுமி கர்ப்பமாக இருப்பது கண்டறியப்பட்டதையடுத்து அவர் வேறு விடுதிக்கு மாற்றப்பட்டார். அப்போது கழிப்பறைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு சம்பந்தப்பட்ட சிறுமி சென்றார். பின்னர் மேற்படி சிறுமியும் அவருடன் வந்த பேத்தியும் காணாமற் போயுள்ளனர்.

இதேவேளை, மலசலகூடத்திற்குச் சென்றவர்களினால் இறந்த நிலையில் காணப்பட்ட குறைமாத சிசு கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது இந்தக் குறைப்பிரசவ குழந்தையின் சடலம் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தீவகத்தில் தடையில்லை!

### கடற்படைப் பேச்சாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிகளுக்கு புகைப்படக் கருவிகளையோ வீடியோ ஒளிபரப்புக் கருவிகளையோ கொண்டுசெல்லக்கூடாதென தாம் தடைவிதிக்கவில்லை என கடற்படைப் பேச்சாளர் கொமடோர் ஜெயந்த பெரேரா தெரிவித்தார்.

இணையத்தளமொன்றில் வெளியான செய்தி குறித்து அவரிடம் கேட்கப்பட்டதற்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

# மலையகத் தமிழர் குடியிருப்பு மீது சிங்களக் காடையர்கள் தாக்குதல்!

## களுத்துறையில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

களுத்துறையில் உள்ள தமிழ் தொழிலாளர் குடியிருப்பு மீது சிங்கள காடையர்கள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவம் களுத்துறை பிதுனாகலந்த என்னும் பகுதியிலே இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் 6 பேர் காயமடைந்தனர் எனத் தெரியவருகிறது. காயமடைந்தவர்கள் ஹொறன மற்றும் கொழும்பு வைத்தியசாலைகளில்அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்விடயம் தொடர்பாக களுத்துறைப் பொலிஸாரால் இருவர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் சிங்கள - தமிழ் இனக் கலவரமாக மாறி வருவதாகவும், அப்பகுதியில் பெரும் பதற்றநிலை தோன்றியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்ற போதிலும் இந்தச் சம்பவம் ஒரு தனிப்பட்ட பிரச்சினை என்றும் தற்போது அப்பகுதி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (01)

## வவுனியா - திருமலை மாவட்டங்களில்

# அரசியற்துறை பொறுப்பாளர்கள் விடுதலைப் புலிகளால் இடமாற்றம்!

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளால் வவுனியா, திருகோணமலை மாவட்டங்களின் அரசியற்துறைப் பொறுப்பாளர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி இதுவரை காலமும் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய எஸ்.எழிலன் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளராக நேற்றுப் பொறுப்பேற்றார்.

திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்து வந்த திலக் கிளிநொச்சியிலுள்ள தமிழீழ அரசியற்துறை நடுவப்பணியகத்திற்கு இடம்மாற்றப்பட்டுள்ளார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஞானவேல் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்த அமிர்தாப்பிற்குப் பதிலாக இனியவன் நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (03)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297,
077-2349999, 011-4512666, 011-2360290, 011-236029.
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
(சி/2489)
EXPOAIR
Your friend in the skies...

### ஜெயலலிதாவுடன் ஒரே மேடையில்

# வாஜ்பாய் பிரசாரம் செய்யவுள்ளது அவருக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கியம்

## வைகோ தெரிவிப்பு

(திருச்சி)

அரசாங்க ஊழியர்கள் விடயத்தில முதல்வர் ஜெயலலிதா கூறுவதெல்லாம் வடிகட்டிய பொய் என்று ம.தி.மு.க.பொதுச் செயலர் வைகோ கூறினார். திருச்சியில் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி -

ம.தி.மு.க. கடந்த 1994 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி தொடங்கப்பட்டது. இன்றோடு பத்து ஆண்டுகள் முடிந்து நாளை 11 ஆவது வருடத்தில் ம.தி.மு.க. அடி எடுத்து வைக்கிறது.

9 ஆம் வருட தொடக்க விழா 2002 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி தொடங்கி தமிழகம் முழுவதும் 50 இற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தது. கடைசி நிகழ்ச்சியான ஜுன் 29 ஆம் திகதி திருமங்கலம் நிகழ்ச்சியில் பேசியதற்காக நானும் என்னுடன் 8 ம.தி.மு.க. வினரும் பொடா சட்டத்தில் கைது செய்யப்பட்டோம்.

நாங்கள் கைது செய்யப்படுவதற்கு காரணமாக அமைந்த அதே திருமங்கலத்தில் 11 ஆவது தொடக்க விழா நடக்கிறது.

பொடா மறுப்பு ஆய்வுக்குழு எங்களுக்கு சாதகமாக தீர்ப்பளித்தது. ஆனால், தமிழக அரசு அந்த வழக்கை நடத்துவோம் என்று உச்ச நீதிமன்றத்திற்குப் போனார்கள். தமிழக அரசு தொடுத்த இந்த வழக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று உச்ச நீதிமன்றம் கோரிவிட்டது.

அழிவு ஒட்டு மொத்தமாக வருமென்பார்கள். அப்படித்தான் ஜெயலலிதாவிற்கு இப்போது அழிவு வந்துவிட்டது.

1998 இல் அண்ணா பிறந்தநாள் கூட்டத்துக்கு பிரதமர் வாஜ்பாய் வந்தபோது, அவருடன் மேடையில் ஏறமாட்டேன் என்று ஜெயலலிதா கூறினார். ஒரு வாக்கினால் வாஜ்பாய்



அரசைக் கவிழ்த்தார். வாஜ்பாய் தமிழ் நாட்டுக்கு வந்தால் அவரை விரட்டி அடியுங்கள் என்று கூறினார். இப்போது அவ்ருடன் ஒரே மேடையில் பேசும் துர்ப்பாக்கியம் வாஜ்பாய்க்கு நேர்ந்ததை நினைத்து நான் வருத்தப்படுகிறேன்.

இனி பா.ஜ.கவுடன் கூட்டணி சேரமாட்டோம். திராவிட இயக்கத்தை பலப்படுத்துவதே என் பணியாகும். தி.மு.கவின் வெற்றி பிரகாசமாக இருக்கிறது என்றார் வைகோ.

# பூமியை நோக்கி இராட்சத எரிகல்

4 கிலோமீற்றர் அகலமான எரிகல் ஒன்று பூமியை நெருங்கிவருகின்றது. இதனால் ஆபத்து எதுவும் இல்லை என்று விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

வானம் அதிசயங்கள் நிறைந்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிகழ்வு அங்கு அரங்கேறிக் கொண்டே இருககிறது. அவற்றை அவ்வப்போது விஞ்ஞானிகள் கண்டுபிடித்த வண்ணம் இருக்கிறார்கள்.

சுமார் 4 கிலோமீற்றர் அகலமான ராட்சத எரிகல் ஒன்று சூரியனை சுற்றி வலம்வருவதை தற்போது அமெரிக்காவிலுள்ள நாஸா விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இந்த எரிகல் வருகிற செப்ரெம்பர் மாதம் பூமியை நெருங்கி வருகிறது.

சூரியனை 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை சுற்றிக்கொண்டிருக்கும் இந்த எரிகல் இதுவரை இல்லாத அளவுக்கு இந்த ஆண்டுதான் பூமிக்கு அதிக நெருக்கமாய் வரவிருக்கிறது.

வருகிற செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி பூமியை அது நெருங்கி வருவதை விஞ்ஞானிகள் ஆர்வத்துடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள். அப்போது எரிகல் பற்றி ஏராளமான தகவல்கள் தெரியவரும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

1353 ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுபோன்ற எரிகல் பூமியை நெருங்கிவருவது இதுவே முதல் முறை என்றும் 2562 ஆம் ஆண்டு வரை இதுபோல் ஒரு எரிகல் நெருங்கி வர வாய்ப்பு இல்லை என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

### சிறைக் கைதிகளின் தொகுதிகளில் தேர்தல் ரத்து:

# உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து தேர்தல் ஆணையகம் மேன்முறையீடு

(புதுடெல்கி)

சிறைக் கைதிகள் போட்டியிடும் தொகுதிகளில் தேர்தலை ரத்துச் செய்யுமாறு பாட்னா உயர்நீதிமன்றம் தேர்தல் ஆணையகத்துக்கு சிபார்சு செய்திருந்தது. அந்த உத்தரவை எதிர்த்து மேல்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதென தேர்தல் ஆணையகம் முடிவு செய்திருக்கிறது.

சிறைக் கைதிகள் போட்டியிடும் தொகுதிகளில் தேர்தலை ரத்துச் செய்யவேண்டுமென்று தேர்தல் ஆணையக்த்துக்கு சிபாரிசுசெய்து, பாட்னா உயர்நீதிமன்றம் பரபரப்பான உத்தரவொன்றைப் பிறப்பித்தது.

ஏற்கனவே, மூன்று கட்ட தேர்தல்கள் நடந்துமுடிந்த நிலையில், இந்த உத்தரவைச் செயற்படுத்தினால், குழப்பம் ஏற்படுமென்று தேர்தல் ஆணையகம் கருதுகிறது.

இதனால் பாட்னா உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து மேல் நீதிமன்றில முறையீடு செய்ய தேர்தல் ஆணையகம் முடிவுசெய்திருக்கிறது.

தலைமை தேர்தல் ஆணையாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்ட[illegible]

தேர்தல் ஆணையக செய்திதொடர்பாளர் ஏ.என்.ஷா, இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பாட்னா உயர் நீதிமன்றத்தின் உத்தரவைத் தொடர்ந்து மேல்நீதிமன்றத்தில் மேன்முறையீடு விரைவில் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

# பெண் வாக்காளரை மிரட்டி பர்தாவை அகற்றினாராம்!

### காஷ்மீர் முதலமைச்சரின் மகள் மீது குற்றச்சாட்டு



(புதுடெல்கி)

கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் பல்வேறு மாநிலங்களில் 136 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் காஷ்மீர் மாநிலம் - ஸ்ரீநகர் தொகுதியிலும் வாக்குப் பதிவு நடைபெற்றது.

வாக்குப் பதிவின்போது காஷ்மீர் முதலமைச்சர் முப்தி முகமது சயீத்தின் மகள் மெகபூபா - வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்குப் பதிவை பார்வையிட்டார்.

அப்போது அவர் வாக்காளர்களை மிரட்டியதாகவும் முதலமைச்சரின் மகள் என்ற முறையில் அதிகாரம் செய்ததாகவும் புகார் தெரிவிக்கப்பட்டது.

பர்ன்ஹால் பள்ளியில் உள்ள ஒரு வாக்குச் சாவடிக்குச் சென்ற மெகபூபா - அங்கு வாக்களிக்க வந்த ஒரு பெண்ணை மிரட்டியதாகவும் அந்தப் பெண்ணின் முகத்திரையை அகற்றியதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து தேசிய மாநாட்டு கட்சி, தேர்தல் ஆணையாளரிடம் புகார் செய்துள்ளது.

இந்த விடயம் குறித்து நடவடிக்கை எடுக்காவிட்டால், அடுத்த கட்டத் தேர்தல்களைப் புறக்கணிக்கப்போவதாகவும் தேசிய மாநாட்டு கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் புகார் குறித்து தேர்தல் ஆணையகம் விசாரணைகளை நடத்தியது.

இந்த விசாரணையின் முடிவில் -வாக்காளர்களை மிரட்டியதற்காகவும், வாக்காளரின் முகத்திரையை விலத்தியதற்காகவும் மெகபூபா மீது வழங்குப் பதிவுசெய்ய வேண்டுமென்று பொலிஸ் தரப்புக்கு தேர்தல் ஆணையகம் உத்தரவிட்டது.

இதையடுத்து, மெகபூபா மீது பொலிஸார் வழக்குப் பதிவுசெய்தனர்.

முகத்திரை அகற்றப்பட்ட அந்தப் பெண்ணிடம் விசாரணை நடத்திய பின்னர் மெகபூபா மீது நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுபற்றி மெகபூபா கூறும்போது -

என் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டிருப்பது குறித்து நான் கவலையடையவில்லை. நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. கள்ள வாக்கு போடப்படுவதைத் தடுக்கவே நான் வாக்குச்சாவடிக்குச் சென்றேன். வாக்காளரை அடையாளம்காண முகத்திரையை விலக்கியதில் தவறில்லை. இந்த வழக்கை நான் சந்திப்பேன்.

தேர்தலைப் புறக்கணிப்போம் என தேசிய மாநாட்டுக் கட்சியினர் மிரட்டுகிறார்கள். தேர்தலில் தோற்றுவிடுவோம் எனப் பயந்துதான் அவர்கள் இந்த மிரட்டலை விடுத்துள்ளனர். இப்போது அவர்கள் பயந்து ஓடக்கூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனக் கூறினார்.

இதற்கிடையே பெண் வாக்காளரின் பர்தாவை அகற்றியதற்கு, மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் சட்ட அமைச்சர் முசாபர் உசேன் மன்னிப்புக் கோரினார்.

### இந்தியச் செய்திகள்

# பரபரப்பை ஏற்படுத்தியிருந்த அத்வானி - சோனியா படம்!

(புதுடெல்கி)

மும்பை பத்திரிகையொன்று வெளியிட்ட அத்வானி - சோனியா படம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மும்பையிலிருந்து 'சித்ரலேகா' என்ற மராட்டிய பத்திரிகை வெளிவருகிறது. அதில் இடம்பெற்றிருந்த நகைச்சுவைப் பகுதியில் துணைப் பிரதமர் அத்வானியும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் மணக் கோலத்தில் கட்டிப் பிடித்துக்கொண்டிருப்பது போன்ற படம் வெளியாகியிருந்தது.

கம்பியூட்டர் கிராபிக்ஸ் முறையில் உருவான இந்தப் படத்துக்கு புனித கூட்டணி என்று தலைப்பு கொடுத்திருந்தனர். இந்தப் பத்திரிகை வெளியானதும் மும்பையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பாரதீய ஜனதா மற்றும் காங்கிரஸ் ஆகிய இரு தரப்பிலும் இந்தச் செய்திக்கு கடும் கண்ட[illegible] தெரிவிக்கப்பட்டது. இரு கட்சித் தொண்டர்களும் அந்தப் பத்திரிகை அலுவலகம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். பத்திரிகைகளின் நகல்கள் தீவைத்து கொழுத்தப்பட்டன.

இந்தச் செய்திக்காக பத்திரிகை நிர்வாகத்தினர் வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். அப்படி இருந்தும் சமாதானம் அடையாத தொண்டர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

# சவப்பெட்டி ஊழல் குறித்துப் பேச சோனியாவுக்கு தடை விதிக்குக!

## தேர்தல் ஆணையகத்திடம் பெர்னாண்டஸ் மனு

சவப்பெட்டி ஊழல் பற்றிப் பேசுவதற்கு சோனியா காந்திக்கு தடை விதிக்கவேண்டும் என்று தேர்தல் ஆணையகத்திடம் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் வற்புறுத்தியுள்ளார்.

இது குறித்து தலைமைத் தேர்தல் ஆணையகத்துக்கு அவர் அனுப்பியுள்ள இரண்டு பக்க புகார் மனுவில் கூறியிருப்பதாவது -

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தேர்தல் பிரசாரத்தின் போது, கார்கில் சவப்பெட்டி ஊழல் குறிதது பேசிவருகிறார். குறிப்பாக எல்லைப் பகுதியில் அவர் இத்தகைய அவதூறான பிரசாரத்தில் ஈடுபடுவது நமது இராணுவ வீரர்களின் கட்டுக்கோப்பை சீர்குலைப்பதாக அமைந்துவிடும். அரசியல்வாதி என்ற முறையில் எனக்கு எதிரான எத்தகைய விமர்சனத்தையும் சந்திக்க தயாராக இருக்கிறேன்.

ஆனால், இராணுவத்துக்கு எதிரான விமர்சனங்களை அனுமதிக்க முடியாது. அதுவும் இந்த விவகாரத்தில் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை. எந்த சாதனங்களையும் வாங்க நிதி ஒதுக்குவது வாங்குவது எல்லாமே அதிகாரிகள் மட்டத்தில் தான் என்று நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பல முறை விளக்கம் அளித்துவிட்டேன்.

அப்படி இருக்கும்போது, மீண்டும் மீண்டும் சோனியா இத்தகைய அவதூறு பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதைத் தடுக்க தேர்தல் ஆணையகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.


...management learning for tomorrow's business

எதிர்கால வணிகத்திற்கான முகாமைத்துவக் கற்கைநெறி

your opportunity to become a graduate by the age of 20 years

20 வயதில் பட்டதா யாகும் சந்தர்ப்பத்தைப் பெறுவதற்கு அரிய வாய்ப்பு

abe

Association of Business Executives-UK

வணிக மேலாண்மை குழு - இங்கிலாந்து

Fastest route to MBA

certificate & Diploma Courses commencing on 10th May 2004

விரைவாக வணிக மேலாண்மையில் பட்டம்பெற அரிய வாய்ப்பு வணிக நிர்வாகத்துறையில் புலமையடைவதற்கு பட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கு

மே மாதம் 10 ஆம் திகதி தொடக்கம்

Business Administration
Business Information Systems
வணிக நிர்வாகம்
வணிக தகவல் முறைகள்

IELTS / Spoken English — Conducted by British qualified experienced lecturers in English

பேசுவதற்கான ஆங்கிலம் - பிரித்தானியாவில் பயிற்சி பெற்ற அனுபவம் மிக்க விரிவுரையாளர்கள்

Visit us for more details
மேலதிக விபரங்களுக்கு

UNIVENTURES
INSTITUTE OF BUSINESS MANAGEMENT
16 Kandappah Segaram Road,
Jaffna. Tel: 021 2227666

UNIVENTURES
வணிக மேலாண்மை கல்லூரி
(K.K.S. வீதி,
ப.நோ.கூ. சங்க கட்டடம் முன்பாக)
16, கந்தப்ப சேகரம் வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம்.தொ.பேசி: 021 222 7666

(சி/2484)



நாகம்ஸ் சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு நடித்த
அருள் (றீல்ஸ்)



ஆசனப் பதிவுகளுக்கு - நாகம்ஸ் பாட்டா-சுன்னாகம்
நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின்ற் காடின், முட்டாஸ் கடைச்சந்தி, K.K.S றோட், யாழ்ப்பாணம். (சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை

சிறிகாந், பூமிகா மற்றும் விவேக் நடித்த
றோஜா கூட்டம்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)
Do not Disturp
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.

இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த
கில்லி



காட்சி நேரம் : 10.30,2.30,6.30, 9.30 (பு.நே)
(சி-2387)

## விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை

# கதிர்காமரிடம் விளக்கியது நோர்வேத் தூதுக்குழு!

(கொழும்பு)

இனப்பிரச்சினைத தீர்வுக்கான பேச்சுவார்த்தை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை நோர்வே தூதுக் குழுவினர் ஜனாதிபதி சந்திரிகாவிடம் தெரிவித்துள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஊடாக இந்த நிலைப்பாடு கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் கடந்த திங்கட்கிழமை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் மாலை கதிர்காமரைச் சந்தித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே தாம் முன் வைத்த தன்னாட்சி அதிகாரசபை முன்வரைபின் அடிப்படையிலேயே புதிய அரசாங்கத்துடன் பேச்சுக்களை ஆரம்பிக்க விரும்புவதை இதன்போது நோர்வே குழுவினர் கதிர்காமரிடம் தெரிவித்ததாக தகவல்கள் தெரிவித்தன.

இந்த நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கையை அரசாங்கமே முன்னெடுக்கவேண்டும் என்பதையும் நோர்வேக் குழுவினர் இதன்போது சுட்டிக்காட்டினர்.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும்போது அதனை உள்நாட்டில் நடத்துவது சாத்தியமற்றது எனக் கூறியுள்ள நோர்வே தூதுக்குழுவினர் வெளிநாடுகளே அதற்கு வாய்ப்பானவை என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கருத்தையும் வெளிநாட்டமைச்சரிடம் தெரிவித்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா கடந்த திங்கட்கிழமை நுவரெலியாவில் இருந்த காரணத்தால் நோர்வே தூதுக்குழுவினர் அவரைச் சந்திக்க முடியவில்லை.

எனவே, அவர்கள் கதிர்காமரிடம் தமது செய்தியை தெரிவித்தனர். இதற்கு பதிலளித்த வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் தமது அரசாங்கம் இது தொடர்பாக ஆராய்ந்து நோர்வே குழுவுக்கு அறிவிக்கும் எனத் தெரிவித்தார்.(01)

## கந்தப்பொல வன்முறை

# மனித உரிமை ஆணைக்குழு திங்கள் முதல் விசாரணை!

(கொழும்பு)

கந்தப்பொலவில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்கள் குறித்துஇலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தமது விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த விசாரணைகளுக்கு மலையகத்தின் அரசியல்வாதியும், சட்டத்தரணியுமான ஒருவர் இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளார்.

விசாரணைகளின் முடிவில் மனித உரிமைகள் ஆணைக்குழு நீதிமன்றம் ஒன்றில் வழக்கைத்தாக்கல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வீடமைப்புக் கடனுக்கு வட்டிவீதம் குறைப்பு!

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியில் இருந்து வீடமைப்புக் கடன் பெறும் ஊழியர்களுக்கு வட்டியை 16 சதவீதத்தில் இருந்து 4 சதவீதமாகக் குறைப்பதற்கு அமைச்சர் அதாவுட செனிவிரத்ன தீர்மானித்துள்ளார்.

முன்னர் ஊழியர் சேமலாபநிதியில் இருந்து கடனைப்பெறுவதற்கு உயர்ந்த வட்டிவீதம் செலுத்தப்பட வேண்டியிருந்ததால் ஊழியர்கள் கடன் தொகையில் 50 சதவீதத்தை வட்டியாக வழங்கவேண்டியிருந்தது.

இந்த வட்டி வீதத்தை 4 சதவீதமாகக் குறைத்து, ஊழியர்கள் நன்மை பெறும் பொருட்டு இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

வீட்டைப் பழுதுபார்ப்பதற்கு, காணி வாங்குவதற்கு, அடமானத் தொகையை மீளப்பெறுவதற்கு கடனைப்பெறமுடியும் என அத்தாவுட செனிவிரத்ன மேலும் தெரிவித்தார்.

## சமாதானப் பேச்சுவார்த்தைகளில்

# நோர்வேயின் பங்களிப்பு தொடர்பாக ஜே.வி.பி - ஜனாதிபதி இன்று சந்திப்பு!

(கொழும்பு)

சமாதானப்பேச்சுவார்த்தைகளில் நோர்வே வகிக்கும் பங்கு தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன், ஜே.வி.பியினர் இன்று பேச்சு நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சமாதான முன்னெடுப்பில் குறித்த, வரையறைக்கு அப்பால் நோர்வேயின் செயற்பாடு செல்லக்கூடாதென்பதே ஜே.வி.பி யினரது நிலைப்பாடாகும்.

அத்துடன் தற்போது நோர்வேயின் அனுசரணையாளர் முயற்சியை எதிர்க்கும் ஜே.வி.பியினர், இந்தியாவின் பங்களிப்பினை கூடுதலாகப் பெறவேண்டுமெனவும், ஜனாதிபதி சந்திரிக்காவிற்கு அழுத்தத்தினை ஏற்படுத்திவருகின்றனர்.

இதனைவிட, நாடாளுமன்றில் அரசிற்கு பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கச் செய்வதற்கு உதவும் என எதிர்பார்க்கப்படும். ஹெல உறுமயவினரும் நோர்வேயின் அனுசரணை முயற்சியை எதிர்த்து வருகின்றனர்.

இந்த நிலையில் எதிர்காலத்தில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது, நோர்வேயின் அனுசரணையாளர் பங்கு எவ்வாறானதாக அமையும் என்பது தொடர்பாக ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது ஆராயப்படவுள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

## மட்டு அம்பாறை பகுதிகளுக்குள்

# இரவு 10 மணிக்கு மேல் நுழைவதற்குத் தடை!

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்கான சகல உள்நுழைவு மற்றும் வெளியேறும் இடங்கள் அனைத்தும் இரவு 10 மணி தொடக்கம் காலை 5 மணிவரை மூடப்பட்டிருக்கும் என்று, பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கிழக்குப்பகுதி இராணுவத் தளபதி, யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு, விடுதலைப்புலிகளின் சம்மதத்துடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்தப் பகுதிகளில் அதிகாரம் வழங்காதவர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவதைத் தடுப்பதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் விடுதலைப் புலிகளின் குறிப்பிட்ட பகுதி அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாடாளுமன்ற உறுப்பினர் தேடப்படுகின்றார்!

கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், இரகசிய பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார். அண்மையில் நகரின் வியாபாரத்தளங்களில் கண்டுபிடிக்கப்பட்ட, அரசாங்கம் வறிய மக்களுக்காக வழங்கிய கூரைத்தகடுகள் தொடர்பிலேயே, இவர் தேடப்படுகின்றார். குறிப்பிட்ட கூரைத்தகடுகளை விற்பனை செய்ததன் மூலம் சுமார் 20 இலட்சம் ரூபாவை இவர் பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக ஏற்கனவே இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## உதவிபெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும்!

அமெரிக்கா விரைவில் அறிவிக்கவிருக்கும் உதவிபெறும் நாடுகளின் பட்டியலில், இலங்கையும் சேர்க்கப்படும் என, எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் தகவலை ரொய்டர் செய்தி சேவை அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இதற்கான அறிவித்தலை விரைவில் விடுப்பார் என, எதிர்பார்க்கப்படுகின்றது. அமெரிக்க ஜனாதிபதி 2005 ஆம் ஆண்டுக்கான இந்த உதவித்திட்டத்தின் கீழ் 2.5 பில்லியன் டொலர்களை அமெரிக்க காங்கிரஸிடம் கேட்டுள்ளார்.

## டி.சிவராம் சட்டத்தரணிகளுடன் ஆலோசனை

தமது வீடு சோதனையிடப்பட்டமை தொடர்பில், சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தரணிகளுடன் ஆலோசித்து வருவதாக ஊடகவியலாளர் டி.சிவராம் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸார் சிவராமின் வீட்டை, அவர் இல்லாத நேரத்தில் சோதனையிட்டனர். இந்தச் சம்பவத்தை பல்வேறு அமைப்புக்களும் கண்டித்துள்ளன. ஊடக சுதந்திர தினத்தன்று நடந்த இந்தச் சம்பவம், ஊடகத்துறையினருக்குப் பாரிய அச்சுறுத்தலை விடுத்துள்ளதாக அந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இந்தச் சம்பவத்தை வன்னி ஊடகவியலாளர் சங்கம் கண்டித்துள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இல்லாத நிலையில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றமை ஏற்றுக்கொள் முடியாது எனவும், அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

## ஐ.தே.கட்சியின்

# இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும்கட்சி ஆசனங்களில்?

ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும்கட்சி ஆசனங்களில் அமரவுள்ளதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவித்தனர்.

நாடாளுமன்றத்தில் இருக்கைகள் ஒதுக்கப்படும் போது, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிக்கு தலா 116 இருக்கைகள் ஒதுக்கப்படுவது வழமையாகும்.

இம்முறை எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 118 ஆகவும், ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 106 ஆகவும் காணப்படுவதை அடுத்தே, இவ்விருவரும் ஆளுங்கட்சி வரிசையில் அமரவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதன்படி, எதிர்க்கட்சியின் பின் வரிசை ஆசனங்களில் இதுவரை அமர்ந்திருந்த இரண்டு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியின் ஆசனங்களில் இனிமேல் அமர்ந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கந்தப்பொல சம்பவத்துக்கு ஐ.முன்னணி அரசே பொறுப்பு

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கந்தப்பொலவில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றிலேயே ஐக்கிய தேசியக் கட்சி இந்தக் குற்றச்சாட்டை பகிரங்கமாகத் தெரிவித்தது.

கந்தப்பொலவில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கடைப்பிடித்த மௌனம் காரணமாகவே மக்களின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் இழப்புக்கள் ஏற்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி தனது குற்றச்சாட்டில் தெரிவித்துள்ளது.

மலையகத்தில் இடம்பெற்ற இந்த வன்முறைகள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமை அந்த அரசின் தகுதியின்மையையுமே சுட்டிக் காட்டுவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

அத்துடன், இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாமல் இருப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதோடு, இவ்வன்முறைகளால் பாதிப்படைந்தவர்களுக்கு நஷ்ட ஈட்டினை புதிய அரசாங்கம் வழங்கவேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

## பிரதி சபாநாயகர் தெரிவு ஹெல உறுமய ஆராயவுள்ளது!

நாடாளுமன்றத்துக்கான பிரதி சபாநாயகர் தெரிவு குறித்து ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழு ஆராயவுள்ளது.

இக்கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறும் என ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மலோக தேரர் தெரிவித்தார். இக்கூட்டத்தில், நாடாளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் தெரிவு மற்றும் நாடாளுமன்றக் குழுத் தலைவர் தெரிவு குறித்து ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## தமிழ் மக்களிடம் கப்பம் திரட்டும் நடவடிக்கை!

புத்தளத்தில் தமிழ் மக்களிடமிருந்து கப்பம் திரட்டும் நடவடிக்கையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடைய ஆதரவாளர்கள் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட தமிழ் பகுதிகளில் வாழ்கின்ற தமிழ் வர்த்தகர்களையும், மக்களையுமே இவர்கள் அச்சுறுத்தி வருவதாகவும் கூறப்படுகின்றது. இவர்களுக்கு கப்பம் கொடுக்க மறுப்பவர்களுக்கு, கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

# பொருளாதாரக் கொள்கைகள் வெளியிடும்வரையில் நிதியுதவியை நிறுத்திவைக்க நிதிநிறுவனங்கள் முடிவு

(கொழும்பு)


புதிய அரசு தனது பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான விவரங்களை வெளியிடாத வரையில் நிதியுதவிகளை நிறுத்தி வைக்க சர்வதேச நிதி நிறுவனங்கள் முடிவெடுத்துள்ளன.

இதனடிப்படையில் இலங்கைக்கு இரண்டாவது கட்டமாகக் கொடுக்கப்பட வேண்டிய 80 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான நிதியுதவிகளை இடைநிறுத்தி வைக்க சர்வதேச நாணய நிதியம் முடிவு செய்துள்ளது.

இதுபோன்று, 30 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான தனது நிதியுதவிகளை இடைநிறுத்தி வைப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியும் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட விடயங்களை உடனடியாக நிறைவேற்றுவதனால் மிகப்பெரிய வரவு செலவு திட்டப் பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று கருதப்படுகின்றது.

## இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட்; ஹீத் ஸ்ரீக்கும் பங்கேற்கிறார்!



இலங்கை அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இன்று சிம்பாப்வே அணியின் முன்னாள் கப்டன் ஹீத் ஸ்ரீக் விளையாடவுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணி சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து விளையாடுகிறது. ஒருநாள் தொடரை இலங்கை 5-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்தப் போட்டித் தொடரில் தைபு சிம்பாப்வே அணியின் தலைவராக இருந்தார். இனப்பிரச்சினை தொடர்பாக தேர்வாளர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஹீத் ஸ்ரீக் அணியில் சேர்க்கப்படவில்லை.

வெள்ளை இன வீரர்கள் 15 பேர் புறக்கணிப்பு செய்தனர். இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு உடன்பாடு ஏற்பட்டதாகக் கூறப்பட்டாலும் பிரச்சினை நீறுபூத்த நெருப்பாக புகைந்து கொண்டுதான் இருக்கிறது.

இந்த நிலையில் சிம்பாப்வே - இலங்கை அணிகள் இடையேயான 2 டெஸ்ட் போட்டித் தொடரின் முதல் போட்டி இன்று தொடங்குகின்றது.

இந்தப் போட்டிக்கான சிம்பாப்வே அணியில் ஹீத் ஸ்ரீக் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றும் எர்வின், கிரிப்பர், பிரைஸ் ஆகியோரின் பெயர்களும் அணியில் இடம்பெற்றுள்ளது.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் அமெரிக்காவிலும்?

(புளோரிடா)

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளை புளோரிடாவில் நடத்த மேற்கிந்தியத் தீவுகளிடம் அமெரிக்கா அனுமதி கோரவுள்ளது.

2007 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் புளோரிடாவில் போட்டியை நடத்துவதற்காக அனுமதி கோர புளோரிடா முடிவு செய்துள்ளது. புளோரிடாவின் இந்தத் திட்டத்தை சர்வதேச கிரிக்கெட் சபை - மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏற்றுக் கொண்டால் புளோரிடாவில் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும்.

தெற்கு புளோரிடாவில் இருந்து 40 கி.மீ தொலைவில் உள்ள 2006 ஆம் ஆண்டு கிரிக்கெட் மைதான வளாகம் ஒன்று தொடங்கப்படவுள்ளது.

புளோரிடாவின் வேண்டுகோளை சர்வதேச கிரிக்கெட் சபையும், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையும் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் அமெரிக்காவில் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடைபெற வாய்ப்புள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் மைதானங்கள் வரும் ஜுலை மாதம் 4 ஆம் திகதி அறிவிக்கப்படுகிறது. போட்டி அட்டவணை ஜுலை 12 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள அண்டிகுவா, பஹாமாஸ், பார்படோஸ, பெர்முடா, கயானா, கிரீனாடா, ஜமேக்கா, டிரினிடாட், செயின்ட் லூசியா, செயின்ட் வின்சென்ட், செயின்ட் கிட்ஸ் நெவிஸ் ஆகிய இடங்களில் உலகக் கோப்பை போட்டிகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆண்டுக்கு 250 கோடி ரூபாவை சம்பாதிக்கும் உதைபந்தாட்ட வீரர்!



இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பிரபல உதைபந்தாட்ட வீரர் டேவிட் பெக்காம் தனது திறமையான ஆட்டம் மூலம் கோடிக்கணக்கான ரசிகர்களின் மனதில் இடம்பெற்றுள்ளார். 2002 ஆம் ஆண்டு ஜப்பானில் நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் இவரது ஆட்டம் பாராட்டும்படி இருந்தது.

இவர் ஸ்பெயின் நாட்டில் உள்ள ரியல் மட்ரிட் கழகத்தில் விளையாடி வருகிறார்.

பிரான்ஸ் பத்திரிகையொன்று பணக்கார கால்பந்து வீரர்களின் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன்படி பெக்காம் முதலிடத்தில் இருக்கிறார்.

ரியல் மட்ரிட் கழகத்தில் ஆடுவதன் மூலம் அவருக்கு ஆண்டுதோறும் சுமார் 250 கோடி ரூபா கிடைக்கிறது. கால்பந்து ஆட்டத்தின் மூலம் இவ்வளவு அதிக தொகையாக ஆண்டுதோறும் யாரும் சம்பாதிக்கவில்லை.

பெக்காமுக்கு அடுத்தபடியாக பிரேசில் வீரர் ரொனால்டோ சுமார் 175 கோடியும், பிரான்ஸ் வீரர் ஷிடேன் 115 கோடியும் ஆண்டுதோறும் சம்பாதிக்கிறார்கள். இந்த இருவருமே ரியல் மட்ரிட் கழகத்தில் தான் ஆடுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பந்துவீச்சு பயிற்சி பெறுவதற்கு இங்கிலாந்து செல்லும் பாலாஜி




(சென்னை)

இங்கிலாந்து சென்று முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மைக் ஹென்றிக்கிடம் பயிற்சி ஆலோசனை பெறவிருக்கிறேன் என்று இந்திய வேகப்பந்து வீச்சாளர் எல்.பாலாஜி கூறியுள்ளார்.

சமீபத்தில் நடந்த பாகிஸ்தான் கிரிக்கெட் சுற்றுப் பயணத்தில் இந்தியக் கிரிக்கெட் அணி வேகப்பந்து வீச்சாளர் பாலாஜி மூன்று டெஸ்டில் 12 விக்கெட்டுக்களையும், 5 ஒருநாள் போட்டியில் 10 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

பாகிஸ்தான் பயணத்தில் ஜொலித்த பாலாஜிக்கு இளஞ்சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

பின்னர் பாலாஜி நிருபர்களிடம் பேசும்போது கூறியதாவது - ஜுலை மாதத்தில் இலங்கையில் நடைபெறும் ஆசியக்கோப்பை போட்டிக்கு முன்பு இங்கிலாந்து சென்று முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மைக் ஹென்றிக்கிடம் 15 நாள் பயிற்சி பெறவிருக்கிறேன்.

இர்பான் பதான், ஆசிஷ் நெஹ்ராவுடன் இணைந்து பந்துவீச்சுப் பயிற்சியில் ஈடுபடவுள்ளேன்.

'அவுட் ஸ்விங்கர்' பந்துவீச்சின் மூலம் பாகிஸ்தான் கப்டன் இன்ஸமாம் விக்கெட்டை வீழ்த்தியது எனது சிறந்த பந்துவீச்சாகும். ராவல்பிண்டி டெஸ்டில் கடைசி விக்கெட்டைக் கைப்பற்றியது வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்வாகும். இவ்வாறு எல்.பாலாஜி கூறினார்.

# விளையாட்டு

## முரளிதரன் தொடர்ந்து பந்துவீச அனுமதி அளிக்க வேண்டும்!

### பிரட்லீ வேண்டுகோள்



பந்துவீச்சு சர்ச்சை பற்றிய கவலை இல்லாமல், தொடர்ந்து பந்து வீச முரளிதரனை அனுமதிக்க வேண்டும் என்று அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த அதிவேகப்பந்து வீச்சாளரான பிரட்லீ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவுஸ்ரேலிய அணிக்கு பிரச்சினையைக் கொடுக்கும் பந்து வீச்சாளர்களில் ஒருவராக முரளிதரன் இருந்தாலும், அவருக்கு ஆதரவாக அவுஸ்ரேலிய அணியின் அதிவேகப் பந்து வீச்சாளரான பிரட்லீ கருத்து தெரிவித்துள்ளார்.

பந்துவீசல் பற்றிய சர்ச்சைகள் இல்லாமல் முரளிதரனை பந்து வீச அனுமதிக்க வேண்டும் என்று பிரட்லீ கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரட்லீ இது குறித்து அளித்த பேட்டியில் என்னுடைய கிரிக்கெட் வாழ்வின் ஆரம்பத்திலும் பந்துவீச்சு முறை குறித்து சந்தேகம் எழுந்தது. என்னுடைய பந்துவீச்சு பற்றி குறை கூறப்படவில்லை.

ஆனாலும் எனது பந்துவீச்சு முறை மீது புகார் கூறப்பட்டது. 10 பேர் கொண்ட குழு முன்பு ஆஜரானேன். ஆனால், எனது பந்துவீச்சு முறை சரி என்று அறிவிக்கப்பட்டது. இது மிகச்சிறந்த விடயம் என்று 27 வயதான பிரட்லீ கூறினார்.

இது குறித்து பிரிட்லீ மேலும் கூறுகையில், முரளிதரனைத் தொடர்ந்து விளையாட அனுமதிக்க வேண்டும். அவரது பந்துவீச்சு குறித்து இடை இடையே புகார் எழுப்பக் கூடாது. சொகைப் அக்தர் விடயத்திலும் அப்படித்தான். சொகைப் அக்தர் ஒரு மிகச்சிறந்த வீரர். என்னுடைய மிகச்சிறந்த நண்பரும் ஆவார் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சிம்பாப்வே சுற்றுப்பயணம் கவலையளிப்பதாக உள்ளது!

### அவுஸ்ரேலிய வீரர் லேமன் கவலை

(லண்டன்)


அவுஸ்ரேலிய அணியின் சிம்பாப்வே பயணம் தனக்கு கவலையளிக்கும் விடயமாக இருப்பதாக அவுஸ்ரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர் டரன் லேமன் தெரிவித்தார்.

சிம்பாப்வே பயணம் மேற்கொள்வதில் ஆரம்பத்தில் அவுஸ்ரேலியாவும், இங்கிலாந்தும் தடுமாறி வந்தன. இது குறித்து இங்கிலாந்து இன்னும் தீர்க்கமான முடிவு எடுக்கவில்லை என்றாலும் அவுஸ்ரேலிய அணி சிம்பாப்வே பயணம் செல்வதை உறுதிசெய்தது.

சிம்பாப்வேயில் மனித உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதை காரணங்காட்டி சில வீரர்கள் அங்கு செல்ல கவலை தெரிவித்தனர். அவுஸ்ரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளரான ஸ்ரூவர்ட் மக்கில் ஏற்கனவே சிம்பாப்வே தொடரிலிருந்து விலகியுள்ளார்.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய அணியைச் சேர்ந்த மற்றொரு வீரரான டரன் லேமன், மக்கிலின் முடிவுக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து டரன் லேமன் கூறுகையில், நாங்கள் ஒரு அரசியல் அணி அல்ல. ஆனால், சிம்பாப்வேயில் கவலைப்படும்படியாக எதுவும் நடக்கவில்லை என்று கூற என்னால் முடியாது. இருப்பினும் அதிகாரிகள் சிம்பாப்வே பயணம் குறித்து தீவிர ஆலோசனை நடத்தி ஒரு முடிவை எடுத்துள்ளனர்.



அந்த முடிவின்படி நான் நடப்பேன். ஆனால், சிம்பாப்வே பயணத்திலிருந்து விலகிய மக்கிலின் முடிவுக்கு எனது முழு ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறேன். இது அவரது முடிவு. இதில் வேறு யாருக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று கூறினார்.

கடைசி நேரத்தில் பாதுகாப்பில் மிகப்பெரிய அளவுக்கு மிரட்டல் ஏற்பட்டால் மட்டுமே இந்தப் பயணம் குறித்து மறுபரிசீலனை செய்யப்படும் என்றும், இல்லையெனில் சிம்பாப்வே பயணம் அறிவித்தபடி நடைபெறும் எனறு அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

### தென்னாபிரிக்க அணி டெஸ்ட் போட்டியிலும்!

(புதுடெல்கி)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடத் திட்டமிட்டுள்ளது. இந்தப் பயணத்தில் அந்த அணி டெஸ்ட தொடரில் விளையாடாமல் 7 ஒரு நாள் போட்டியில் மட்டும் ஆடவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை இந்தியக் கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே.நாயர் மறுத்துள்ளார். தென்னாபிரிக்க அணியின் இந்திய சுற்றுப்பயணத் திகதி மற்றும் போட்டிகள் குறித்து இன்னும் முடிவுசெய்யப்படவில்லை.

தென்னாபிரிக்க அணி இந்தியா வரும்போது டெஸ்ட் போட்டியிலும் விளையாடும். ஒருநாள் போட்டியில் மட்டும் விளையாட இருப்பதாக வெளியான செய்தி தவறானதாகும் என்றும் அவர் கூறினார்.

## இந்தியாவில் ஒக்ரோபர் மாதம் 3 நாடுகள் கிரிக்கெட் போட்டி!

இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து விளையாடியது. கடந்த 18 ஆம் திகதியுடன் பாகிஸ்தான் தொடர் முடிவடைந்தது. 2 மாதம் இந்திய அணி ஓய்வு பெறுகிறது.

ஜுலை மாதம் கொழும்பில் நடைபெறும் ஆசிய கோப்பை போட்டியில் விளையாடுகிறது. செப்ரெம்பர் கடைசியில் இங்கிலாந்து சென்று அந்நாட்டுடன் 3 ஒரு நாள் போட்டி மற்றும் ஐ.சி.சி சம்பியன் போட்டியில் விளையாடுகிறது.

இந்தப் போட்டிக்கு பிறகு அவுஸ்ரேலிய அணி இந்தியா வருகிறது. அவுஸ்ரேலியா வருகையோடு 3 நாடுகள் போட்டியையும், ஒக்ரோபர் கடைசி முதல் நவம்பர் வரை நடத்த இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. அத்துடன் தென்னாபிரிக்காவும் வருவதால் அந்த அணி 3 நாடுகள் போட்டியில் ஆடும்.

இதற்கிடையே இந்திய கிரிக்கெட் சபை அவுஸ்ரேலியாவிடம் 3 நாடுகள் போட்டியில் ஆடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. அவுஸ்ரேலியா இதை ஏற்று விளையாடுமா என்பது விரைவில் தெரியவரும்.

### நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையில்

# பாதுகாப்பான போக்குவரத்துக்கு இதுவரை வழிசெய்யப்படவில்லை!

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான பயணிகள் போக்குவரத்துக்கெனப் பாதுகாப்பான படகொன்றைச் சேவையில் ஈடுபடுத்துமாறு நெடுந்தீவு மக்கள், பொது அமைப்புக்களுக்குரிய உயர் அதிகாரிகளுக்குப் பல கோரிக்கைகள் அனுப்பிய போதும் இதுவரைக்கும் இதற்கான தீர்வுகள் கிடைக்கவில்லை.

பாதுகாப்பற்ற திறந்த படகுகள் மூலம் பயணத்தைத் தற்போது மேற்கொள்ளும் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதுடன் அண்மையில் கடும் காற்றுக் காரணமாக படகில் இருந்து ஒருவர் தூக்கி வீசப்பட்டுக் காணாமற்போயுள்ளார்.

இந்த நிகழ்வின் பின்னராவது நெடுந்தீவு மக்களுக்குரிய போக்குவரத்துச் சீர்செய்யப்படுமா என மக்கள் ஏங்கிக் கிடக்கின்றனர். இதேவேளை சேவையில் ஈடுபட்ட குமுதினிப் படகும் நீண்ட காலமாகியும் திருத்தம் செய்யப்படாமல் இருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. (113)

# நெடுந்தீவுக்கான மின்விநியோகம் 2 ஆம் திகதி முதல் இடைநிறுத்தம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதிக்கான மின்சார விநியோகம் கடந்த 2 ஆம் திகதியுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மின்சார உற்பத்தி இயந்திரப் பாகத்தில் வித்தியாசமான சத்தம் ஒன்று வருவதனால், இயந்திர இயக்குநர் மின்சார விநியோகத்தை நிறுத்தியுள்ளதுடன், இது தொடர்பாக சுன்னாகம் மின் அத்தியட்சகருக்கு அறிவித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

வழமையாக மின்பிறப்பாக்கி பழுதடையும் வேளையில், மின்சாரம் தடைப்பட்டால், இயந்திரத்தைத் திருத்தம்செய்து மீள வழங்குவதற்கு குறைந்தது ஐந்து தினங்களாவது தேவைப்படுகின்றது.

நெடுந்தீவில் மின்பிறப்பாக்கி இயக்குநர் மாத்திரமே கடமையில் உள்ளதால், திருத்த வேலைகள் செய்துகொள்வதற்கென சுன்னாகம் பகுதியில் இருந்தே வேலையாட்கள் வரவேண்டியுள்ளது. இதனால்தான், மீண்டும் மின்சாரத்தைப் பெற நீண்ட நாட்கள் எடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

# நீர்வேலிவாசி ஒருவர் தமிழகத்தில் படுகொலை

(நீர்வேலி)

நீர்வேலியைச் சேர்ந்த நபரொருவர் தமிழகத்தில் வைத்துக் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் காஞ்சிபுர மாவட்டம் முத்துக்காடு என்னும் இடத்தில் கடந்த மாதம் 14 ஆம் திகதி இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் 30 வயதுடைய தங்கராசா தவசுதன் என்ற நபரே மரணமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

காஞ்சிபுர மாவட்டத்தில் முத்துக்காடு என்னும் இடத்தில் கடை வைத்திருந்த இவரை, குழுவொன்று 14 ஆம் திகதி இரவு இவரது கடைக்குச் சென்று மிரட்டி, வாகனம் ஒன்றில் ஏற்றிச்சென்று சவுக்குக் காட்டுப் பகுதிக்குக் கொண்டுசென்றுள்ளனர்.

பின்னர், இவரைப் பலமாகத் தாக்கியதுடன் நஞ்சு அருந்தக் கொடுத்தார்கள்.

இந்த நிலையில் மயக்கமடைந்த இந்த நபர் - வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பயனளிக்காத நிலையில் அங்கு மரணமடைந்தார்.

## 'குணநல உள்ளீடுகள்' கருத்தரங்கு

'குணநல உள்ளீடுகள்' என்னும் தலைப்பில் மானிப்பாய் ஆசிரியவள நிலையத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 வரை கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ்பாணம் ஆசிரியர் நிலைய முகாமையாளர் எஸ்.ரவீந்திரனும், வலிகாம கல்வி வலயத் திட்டமிடல் உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சச்சிதானந்தமும் கருத்துரை வழங்கவுள்ளனர். (101)

# தெல்லிப்பளை பிரதேச எழுச்சிப்பேரவைக் கூட்டம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்திற்கு - ஊரகக் கிளை உறுப்பினர்கள், பிரதேச எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தெல்லிப்பளைப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் எஸ்.தனபாலசிங்கம் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் தேசிய எழுச்சிப் பேரவையினரால் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடவிருப்பதால், அனைத்து உறுப்பினர்களினதும் வருகை முக்கியமானதெனத் தெரிவிக்கப்படுகிறது. (94)

### கடலில் தவறி விழுந்தவர் காணாமற்போனது

# நெடுந்தீவுக்கடலில் இடம்பெற்ற இரண்டாவது துயரச்சம்பவம்!

நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச் சேவையின்போது கடந்த 2 ஆம் திகதி கடலில் தவறிவிழுந்து காணாமற்போயுள்ளமை - நெடுந்தீவு வரலாற்றில் மறக்கமுடியாத ஒரு துயரச் சம்பவமாகக் கருதப்படுகிறது.

1985.05.15 அன்று பயணிகள் படகான குமுதினிப் படகில் பயணித்தவர்கள் நடுகடலில் வைத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டதன் பின்னர், ஏற்பட்ட ஒரு துயரமான நிகழ்வு இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்தால் நெடுந்தீவு மக்கள் பெரும் துயரத்தில் ஆழ்ந்துள்ளதுடன், காணாமற்போனவரைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றனர்.

இதேவேளை, நெடுந்தீவிற்கான பயணிகள் படகுசேவை - சம்பவம் இடம்பெற்ற நேரம் முதல் நிறுத்தப்பட்டதுடன், மூன்றாம் திகதி மாலை நேர சேவையுடனேயே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# பொருளாதார ஆய்வு நிறுவனம் ஆனைக்கோட்டையில் திறந்து வைப்பு!


கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் -தனது யாழ்.மாவட்ட செயலகத்தை குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டையில் நிறுவியுள்ளது. இந்தச் செயலகத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் மங்கள விளக்கினை லண்டன் புனர்வாழ்வு பொறியியல் ஆலோசகர் சு.பரமநாதன் ஏற்றி, பெயர் பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

அலுவலகத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா நாடாவெட்டி திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் சிறப்புரைகளை நிறுவன இணைப்பாளர் க.ஜெயசீலன், கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.சுப்பிரமணியசர்மா, அரசியற்துறைச் சேர்ந்த சுதாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிறுவனம் பாடசாலை மாணவர்களுக்கான கல்விசார், தொழில்சார் பயிற்சிநெறிகளை வழங்கவுள்ளது. கிராமிய மட்ட பொருளாதார அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளவுள்ளதாக யாழ்.மாவட்ட இணைப்பாளர் தி. ஜெயக்குமார் தெரிவித்தார்.

வறிய மாணவர்களுக்கான கல்வி அபிவிருத்தியிலும் பங்கெடுக்கவுள்ள இந்த நிறுவனம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் தனது விசேட கல்வித்திட்டத்திற்கான நிலையம் ஒன்றையும் திறக்கவுள்ளது. இதில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் மீதிறன் மட்டத்திலுள்ள மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளவுள்ளன. (94)



ஆனைக்கோட்டையில் நிறுவப்பட்ட கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு நிறுவன யாழ். மாவட்ட செயலக பெயர்ப் பலகையை லண்டன் புனர்வாழ்வு பொறியியல் ஆலோசகர் எஸ். பரமநாதன் திரைநீக்கம் செய்துவைப்பதையும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ. சுப்பிரமணியசர்மா, அலுவலகத்தை நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம். (94)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில், பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் நாளை பிற்பகல் 5.30 மணிக்கு 'சைவவாழ்வு' எனும் விடயம் தொடர்பாகச் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை சொற்பொழிவாற்றவுள்ளார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : த.சாம்பவி
முகவரி : 2 ஆம் குறுக்குத் தெரு, நல்லூர்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :----------
முகவரி :----------
பிறந்த ஆண்டு:----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

### நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையின்

# வைத்திய அதிகாரி மக்களைச் சந்திக்க ஏற்பாடு செய்துதருமாறு கோரிக்கை!

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய் அதிகாரி - பொதுமக்களைச் சந்தித்து உரையாடச் சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தருமாறு, கடந்த மாதம் இடம்பெற்ற நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டதில் கோரிக்கை விடுத்துள்ளார்.

வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கென வரும் நோயாளர்கள் - தங்களுக்கு ஏற்பட்டநோய் தொடர்பாக தெரியாதவர்களாகவும், நோயின் தன்மை தொடர்பாக மனந்திறந்து தெரிவிக்க அஞ்சுகின்றமையாலும் பொதுமக்களைச் சந்தித்து இது தொடர்பாக விளக்கங்களை அளிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

கிராம அலுவலர் பிரிவுதோறும் உள்ள மக்களைச் சிறுசிறு குழுக்களாகச் சேர்த்து, அவர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது. அத்துடன் தற்போது புதிய வைத்திய அதிகாரி நியமனம் பெற்று வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

# சின்னஞ்சிறு செய்திகள்

## குடாநாட்டில் அதிக மழை; மீன்கள் படையெடுப்பு!

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெய்த பெரு மழையினால், ஆழ்கடலிலிருந்து பெருந்தொகையான மீனினங்கள் குடாக் கடலுக்குப் படையெடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனால், பாசையூர், குருநகர் மீன் சந்தைகளில் நேற்றுமுன்தினம் பெருந்தொகையான மீன்கள் சந்தைப்படுத்தப்பட்டன.

விளைமீன் என்னும் மீனினமே அதிகமாகப் பிடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இந்த மீன்களை வெளியிடங்களுக்குப் பதனிட்டு அனுப்பும் வியாபாரிகள் கொள்வனவு செய்வதில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததையும் காணக்கூடியதாகவிருந்தது. (206)

## இராணுவ காவலரண்கள் அகற்றப்பட்டு வருகின்றன


(யாழ்ப்பாணம்)

2003 ஆம் ஆண்டளவில் மேலதிகமாக யாழ். நகரப் பகுதிகளில் நிறுவப்பட்ட இராணுவக் காவலரண்கள் சில அகற்றப்பட்டுள்ளன.

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியைச் சேர்ந்த சுபத்திரனின் படுகொலையை அடுத்து நிறுவப்பட்ட காவலரண்களில் சிலவே இவ்வாறு அகற்றப்பட்டிருக்கின்றன.

யாழ்.வேம்படி வீதிச் சந்திப் பகுதியில் நிறுவப்பட்டிருந்த காவலரண் மற்றும் இரண்டாம் குறுக்கு வீதியில் நிறுவப்பட்டிருந்த காவலரண் ஆகியனவே தற்போது அகற்றப்பட்டு வருகின்றன. (206)




பொனி

# எம்மிடமுள்ள கூடுதலான அனுபவம் தொழில் வளர்ச்சிக்கு உதவுகின்றது

**யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்தியில் அமைந்திருந்த கெனடி கடிகாரத் திருத்தக உரிமையாளரான பொனி பிரான்சிஸ் என்பவரைச் சந்தித்தபோது அவர் எங்களுடன் பகிர்ந்துகொண்ட விடயங்களை வாசகருக்குத் தருகின்றோம்.**



மணிக்கூடு திருத்தும் தொழிலானது எல்லாத் தொழில்களிலும் பார்க்க வித்தியாசமான நுணுக்கமான ஒரு தொழிலாக விளங்குகின்றது. முறையாகக் கற்று இந்தத் தொழிலை மேற்கொள்வது சிறந்ததாகும். ஆரம்பகாலங்களில் மிகக்குறைவாக இருந்து வந்த இந்தத் தொழிலானது, நவீனத்துவமாக மாறிவரும் இன்றைய சூழலில் சந்திக்குச்சந்தி மணிக்கூடு திருத்தும் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

நான் உயர்தரம் படித்து விட்டு மேலும் டிப்ளோமாப் பயிற்சியினை முடித்தேன். இந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் - எனது அப்பாவும் இதே தொழிலினை மேற்கொண்டு வந்ததாலாகும். படிக்கின்ற காலங்களில் ஓய்வு கிடைக்கும் நேரங்களில் நேரமிருந்தால் அப்பாவுடன் கூடநின்று வேலைசெய்வேன். இதனால் இலகுவாகவும், திறமையாகவும் பழகக்கூடியதாக இருந்தது. இதன் பயனாகத்தான் இன்று நான் ஒருவனே தனிய நின்று தொடர்ந்து தொழிலை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

30 வருடங்களாக இந்தக் கடை இயங்கி வருகின்றது. நான் நான்கு வருடங்களாக இந்தத் தொழிலை மேற்கொண்டு வருகின்றேன். பரம்பரைத்தொழிலாக இருந்ததால் தொடர்ந்தும் இயங்கிவருகின்றது. இத்தொழிலினை மேற்கொள்வதற்குத் தொழில்நுட்பக் கல்லூரியில் சென்று படித்தால் போதாது. நல்ல அனுபவமும், பயிற்சியும் தேவை. எனக்குக் கூடுதலான அனுபவம்தான் இந்தத் தொழில் வளர்ச்சிக்குக் காரணம். இன்றைய காலங்களில் பல நாடுகளிலிருந்து பலதரப்பட்ட மணிக்கூடுகள் வருகின்றன. ஆனால், எல்லா இயந்திரங்களும் ஒரே மாதிரித்தான் அதன் தொழிற்பாடு இருக்கின்றது. இயந்திரம் பொருத்தி இருக்கும் கருவிகள் வித்தியாசமான முறையில் வடிவமைக்கப்பட்டு இருக்கும். அப்படி இருந்தாலும், பொருத்தியிருக்கும் கருவிகளின் தொழிற்பாடு ஒன்றாகத்தான் இருக்கும். ஆகவேதான், புதிது புதிதாக மணிக்கூடுகள் வந்தாலும் திருத்திக் கொடுக்கக்கூடியதாக இருக்கின்றது.

ஒவ்வொரு கடைகளும், மணிக்கூடுகள் திருத்திக்கொடுக்கும் செலவுகள் வித்தியாசமாக இருக்கும். ஏனெனில், வீதியோரமாக மேசை ஒன்றினை வைத்து தொழில் நடத்துகின்றவர்களுக்கு கடைக்கான வாடகைச் செலவு இருக்காது. இப்படியாகப் பல செலவுகள் இல்லாததால் அதற்கேற்ப அந்தத் தொழிலாளி மணிக்கூடு திருத்திக்கொடுக்கும் செலவினைக் குறைத்திருக்கலாம்.

நான் வாடகைக்குக் கடை ஒன்றினை திறந்து தொழிலை மேற்கொள்வதால், பல செலவுகள் இருக்கின்றன. ஆகவே, நான் ஒரு விலையை நிர்ணயிக்க வேண்டிய தேவை உள்ளது. இவ் வாறுதான் இதைவிடப் பெரிய கடை ஒன்றைப் பிரசித்தி பெற்ற இடங்களில் திறந்தால், அதற்கு ஏற்படும் செலவுகளை அடிப்படையாகக் கொண்டு, விலையை நிர்ணயிக்கவேண்டிய தேவையுள்ளது. ஆகவே, ஒவ்வொரு இடத்திலும் மணிக்கூடு திருத்திக்கொடுக்கும் கடைகளில் திருத்துவதற்கான செலவுகள் வித்தியாசப்படும்.

புதிதாக வரும் மணிக்கூடுகள் பழுதடைந்தால், அதற்குத் தேவையான கருவிகள் இங்கு எடுக்கமுடியாது இருந்தால் - பழுதடைந்துபோன பயன்படுத்த முடியாத மணிக்கூடுகளிலிருந்து அதற்குத் தேவையான கருவிகளை எடுத்து பொருத்தி திருத்திக்கொடுப்பேன். இதனால், வாடிக்கையாளர்கள் நிறையப்பேர் வருகிறார்கள். அவர்களுக்கு இல்லை என்று, திருப்பிக் கொடுக்காமல் கஷ்டப்பட்டாவது, இல்லாத கருவிகளை வெளியிடங்களில் தேடி எடுத்து, பொருத்திக்கொடுப்பேன். பல்கலைக்கழகம் அண்மையில் இருப்பதால் நிறைய மாணவர்கள் வருவார்கள்.

எனது கடையைத்தேடி வரும் வாடிக்கையாளர்கள் மணிக்கூட்டை உடனடியாகத் திருத்திக் கையோடு எடுத்துப் போகத்தான் பார்ப்பார்கள். அதைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். பெரிய பிழையாக இருந்தால் மணிக்கூட்டை வாங்கி விட்டு பிறகு வாங்க என்று சொன்னால் நம்பமாட்டார்கள். பக்கத்துக் கடைக்குப் போய்விடுவார்கள். ஆனால் என்ன பிழை, எவ்வளவு மணிநேரம் எடுக்கும், பிழையினை திருத்திக்கொடுக்க என்று அவர்களிடம் விளக்கம் சொல்லித்தான் புரியவைக்கமுடியும். இதன்மூலம் கூடுதலான நம்பிக்கை எனக்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையில் ஏற்படுகின்றது. தொழிலினை விருத்திசெய்ய இந்த நடவடிக்கை முக்கியமாக விளங்குகின்றது.

பல காலமாக இந்தத் தொழிலை மேற்கொண்டுவருவதால், பல மணிக்கூட்டுக் கருவிகள் நிறையவே சேமிப்பில் இருப்பதால், எங்கேயும் தேடி அலையவேண்டிய தேவை இருக்காது. இதனால் உடனடியாக வேலையை முடிக்கக் கூடியதாக இருக்கின்றது.

புதிதாக இந்தத் தொழிலை மேற்கொள்பவர்கள் முதலில் கஷ்டமாகத்தான் இருக்கும்.

மணிக்கூட்டில் தரமான மணிக்கூடு, தரமில்லாத மணிக்கூடு என்று பிரித்துப் பார்ப்பது மிகக்கஷ்டம். விலை அடிப்படையிலும் மதிப்பிடலாம். ஆனாலும் மக்கள் ஏமாற்றம் அடைகின்றார்கள். மணிக்கூட்டின் பின்மூடி உடனடியாகக் கறுப்பதும், அடுத்ததாக பூட்டியிருக்கும் ஆணியின் வடிவத்தைப் பார்த்தும் பிடிக்கலாம்.

அடுத்தது உற்பத்தி செய்யும் நாட்டின் பெயரை மணிக்கூட்டுக்குப் பின்னால் எழுதியிருப்பார்கள். எழுத்து வடிவத்தை வைத்து, தரம் பிரிக்கவும் முடியும். மணிக்கூட்டோடு பழகிய அனுபவம் உடையவர்களால் மட்டும்தான், பார்க்கமுடியும். தெரியாதவர்கள் பார்ப்பது கஷ்டம்.

யுத்தம் நடந்த காலப்பகுதியில் பற்றிக்குத் தடை ஏற்பட்டது. இதனால், தொழில் பெரிதும் பாதிப்படைந்தது. பாதை திறந்து இப்போது, நேரடியாகக் கருவிகள் கொழும்பிலிருந்து வருவதால், எந்தவித பிரச்சினையும் இல்லை. நானே நேரடியாகக் கொழும்புக்குச் சென்று, மணிக்கூட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கிவரக்கூடியதாக இருக்கிறது. இப்படியான சூழ்நிலை தொடர்ந்து இருந்தால் எந்தவிதப் பாதிப்பும் இல்லாமல் தொடர்ந்தும் தொழிலை மேற்கொள்ள முடியும்.

இன்றைய சூழலில் என்ன வேலை என்றாலும் படித்தவர்களுக்கே வேலைகிடைப்பது கஷ்டம். படிக்காதவர்களுக்கு வேலை கிடைத்து விடுவது அபூர்வமாக இருக்கின்றது என்று சொல்லிமுடித்தார்.

நேர்காணல் - செல்வா, லெஸ்லி.

# குறைந்த நேரத்தில் அதிக வேலைகளை திட்டமிடல் மூலம் செய்து கொள்ள முடியும்

அதிகளவிலான வேலைகளைக் குறைந்தளவு நேரத்தில் எவ்வாறு செய்துமுடிக்கலாம என்பது ஒவ்வொரு தொழில் நிறுவனங்களிலும் கேள்வியாக அமைகின்றது.

கிடைக்கின்ற நேரத்தில் அதிகளவிலான வேலைகளைச் செய்தல் என்பது நேரத்தை முகாமைசெய்தல் என்பதுடன் தொடர்புபடுகின்றது. ஒருவேலையை எவ்வளவு நேரத்தில் செய்து முடிக்கலாம் என்கின்ற கணிப்பீடுகள் பல வருடங்களுக்கு முன்னரேயே தோன்றிவிட்டது.

நேரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்ற சிந்தனையானது பல வருடங்களுக்கு முன்னரேயே தோன்றிவிட்டது. இந்தச் சிந்தனையின் தொடர்ச்சியில் அமைந்ததே நேரமுகாமைத்துவம் என்பதாகும்.

மனிதர்கள் யாவரும் பொதுவாகக் குறைந்தளவு நேரத்தில் எவ்வாறு நிறைந்தளவு வேலைகளைச் செய்யலாம். என்பதில் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

அதிக மன அழுத்தங்கள் இன்றி குறைந்த மன அழுத்தங்களுடன் ஒரு வேலையைச் செய்யவே மனிதர்கள் விரும்புகின்றார்கள்.

இந்த நிலையில் நேரம் என்பது மனிதனால் கட்டுப்படுத்தமுடியாத காரணி என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆகவே, நாம எமக்குக் கிடைக்கும் நேரததை எவ்வாறு பயன்படுத்தவேண்டும்.

நாம் எம்மை முகாமைசெய்துகொள்ள வேணடியது முதலாவது கடமையாகும். அவ்வாறு முகாமைசெய்துகொண்டால், அடுத்தவரை முகாமைசெய்யும் தகுதிதானாகவே ஏற்படும். தொழில் ஒன்றை வேகமாகவும், விவேகமாகவும் முடித்துக்கொள்வதற்கு இத்தகைய ஒரு முகாமை அவசியமாகும்.

ஒரு தொழில்நிறுவனத்தில் சுயமுகாமைத்துவத்தைப் பெற்ற ஒருவர், எவ்வாறு ஏனையோரை முகாமைசெய்யவேண்டும் என்பதை அறிந்துகொள்வார்.

ஏனையோரை முகாமைசெய்வதற்குச் சில தேர்ச்சிகள் எவ்வாறு தேவைப்படுகின்றதோ, அதேபோல் ஒருவர் தன்னைத் தானே முகாமை செய்யவும் சில தேர்ச்சிகள் அவசியமாக இருக்கின்றன.

தொழிலைத் திட்டமிடுகின்ற ஆற்றல், அதனைக் கையளிக்கும் திறமை, ஒழுங்கு முறைக்குள் தொழிலைக் கொண்டுவருதல், தொழிலை நெறிப்படுத்தல் என்பவற்றோடு தொழில் ஒன்றைத் தனது கட்டுப்பாட்டுக்குள்ளும் கொண்டுவரவேண்டியது அவசியமாகும்.

சரியான ஓர் திட்டமிடல் இன்றி எதனையும் செய்யமுடியாது. இந்தச் சரியான திட்டமிடல்கள்மூலமாக யாரிடம் எந்தத் தொழிலைக் கையளிப்பது என்ற விடயம் மிகவும் முக்கியமான ஒன்றாக அமைகின்றது.

கையளிக்கப்பட்ட தொழில்முறைகள், எவ்வாறு நடைபெறவேண்டுமென்பது பற்றி ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். அவ்வாறு ஒழுங்கமைத்ததன் பின்னர், தொழில்களைச் சரியான முறையில் நெறிப்படுத்துவது அவசியமாகும். யாவற்றுக்கும் மேலாக கட்டுப்படுத்தல் என்பது முக்கியமானது. கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் ஒருதொழில் முறையே சிறந்த உற்பத்தியைப் பெற்றுக் கொடுக்கும் முகாமையில் இது முக்கியமான ஒன்றாக அமைகின்றது.



தன் கை மீறிப்போகாமல் பார்த்துக்கொள்வதே இந்தக் கட்டுப்படுத்தல் என்னும் செயற்பாடாகும். அது தவிர்ந்த கட்டுப்பாடுகள் என்பது ஒருவகையான மன அழுத்தத்தையே தருவதாக இருக்கும். தொழில் நன்மைக்கு அது ஏற்ற ஒன்றல்ல. ஆகவே, இந்த ஐந்து நிலையான விடயங்களைக் கடைப்பிடிப்பதன்மூலம் குறைந்த நேரத்தில் நிறைந்த தொழில்களைப் புரியலாம் - புரியவைக்கலாம் - உற்பத்தியைப் பெருக்கலாம்.

- பூ.நகுலன் -

# எமது நாட்டில் குறைவாகவுள்ள வர்த்தகரீதியிலான மஞ்சள் உற்பத்தி!

எமது நாட்டில் சிறுசிறு நோய்களைக் குணப்படுத்திக் கொள்வதற்கு இயற்கையான தாவரங்களிலிருந்து வரும் பயன்களைப் பயன்படுத்துவதற்குப் பழகியிருக்கும் மக்கள் - மருத்துவக்குணமுள்ள தாவரங்கள் சிலவற்றை உற்பத்தி செய்து கொள்ளவும், அவற்றினால் பயன்களைப் பெற்றுக் கொள்ளவும் பழகியுள்ளனர்.

இவ்வாறு பயன்படுத்தப்படும் மருத்துவத் தாவரங்களில் மஞ்சள்செடியும் ஒன்றாகும். மஞ்சள்செடி மருத்துவக் குணமுள்ள செடிமட்டுமல்ல, இது உணவுக்கும் பயன்படுகின்றது.

| உரம்போடும் காலங்கள் (ஹெக்ரேயர் ஒன்றிற்கு) | யூரியா | பொஸ்பேட் | மியுரியேட் ஒவ்பொஸ்பேட் |
|---|---|---|---|
| முதல் முறை | 60கி.கி | 150கி.கி | 60 கி.கி |
| விதைத்து 2 -21/2 மாதத்தில் | 75கி.கி | - | 75 கி.கி |
| விதைத்து 31/2 - 4 மாதத்தில் | 75கி.கி | - | 75 கி.கி |

இதனைக் கிருமிநாசினியாகவும் பயன்படுத்தலாம். மேலும் மஞ்சள் அநேகமாக தமிழ் மக்களின் சமயவழிபாடுகளிலும் அனைத்து சுபகாரியங்களிலும் மிக முக்கியமாக பயன்படுத்தப்படுகின்றது. ஆதிகாலத்திலிருந்து துணிகளுக்குச் சாயம் போடுவதற்குக் கூடுதலாக மஞ்சளைப் பாவனைக்கு எடுக்கிறார்கள்.



மஞ்சளை விஞ்ஞானரீதியில் கர்கியுமா லொன்கா (Carcuma Lonka) என அழைக்கப்படுகிறது.

தெற்கு, தென் கிழக்கு ஆசியாவிலேயே மஞ்சளை முதனமுதலாக உற்பத்தி செய்து வந்தார்கள். மஞ்சள் பல நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு வந்தாலும், பிரதான உற்பத்தி செய்யப்படும் இடங்களாக - இந்தியா, சீனா, இந்தோனேசியா ஆகிய நாடுகள் காணப்படுகின்றன.

இலங்கையில் மஞ்சள் உற்பத்தி வர்த்தகரீதியில் செய்யப்படுவது மிகக்குறைவாகவுள்ளது. ஆனாலும், உலர் வலயப் பிரதேசங்களில் உற்பத்திக்குத் தேவையான காலநிலையைக் கருத்திற்கொண்டு அதற்கேற்ப மஞ்சள் உற்பத்தி செய்து வருகின்றார்கள். காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா, குருணாகல், கேகாலை, இரத்தினபுரி, பதுளை ஆகிய மாவட்டங்களில் உற்பத்தி செய்துவருவதைக் காணலாம்.

மஞ்சள் உற்பத்திசெய்யும்போது அதற்கேற்ற ஈரத்தன்மையான மண்ணுள்ள இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும. உலர் வலயப் பிரதேசங்களில் உற்பத்திசெய்வதாயின் நீர் விநியோகிக்கக்கூடிய இடங்களில் உற்பத்தி செய்வது மிகநல்லது. நிழல், அதிக சூரியவெளிச்சம் மஞ்சள் உற்பத்திக்கு உகந்ததல்ல.

உலர்வலயப் பிரதேசங்களில் உற்பத்தியை மேற்கொள்ளும்போது கடல் இருக்கும் இடத்திலிருந்து 2000 - 2200 அடி தூரப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படவேண்டும். வெவ்வேறு மண்ணிலும் உற்பத்தி செய்யக்கூடிய செடி என மஞ்சள் கருதப்படுகின்றது.

மஞ்சள் செடி தேயிலை, இறப்பர், தென்னை , வாழை, மிளகு, கோப்பி ஆகியவை உற்பத்திசெய்யப்படும் பிரதேசங்களில் மேலதிகமான உற்பத்தியாக இந்த மஞ்சள் உற்பத்தியையும் மேற்கொள்ளலாம்.



பாத்திகள் ஒழுங்கு செய்வதாயின், 75செ.மீ அகலமாக இருக்கவேண்டும். எமக்குத் தேவையான நீளத்திற்கு ஒழுங்கு செய்வதோடு 30செ.மீ இடைவெளியில் இரண்டு வரிசையாக விதைக்கமுடியும். மேலும் இரண்டு பாத்திகளுக்கும் இடையில் 50 செ.மீ இடைவெளியில் தண்ணீர் பாய்ச்சுவதற்கு வாய்க்கால் வெட்டுதல்வேண்டும்.

மஞ்சள் உற்பத்தியின்போது காபனிக் உரத்தை போடுவது மிக நல்லது. மேலும் உமி, வைக்கோல், தும்புகள், போன்றவற்றை இதற்குப் பயன்படுத்தலாம். இதனால் ஈரத்தன்மை பாதுகாப்பதோடு, புற்கள் வளர்வது தடுக்கப்படுகின்றது. மஞ்சள் உற்பத்தியில் கிருமிகள் பாதிப்போ, நோய்களின் பாதிப்போ மிகவும் குறைவாகும். தண்டுகளை ஓட்டை போடும் மயிர்க்கொட்டிகளின் பாதிப்பும், பச்சை நிறமாக புள்ளி விழும் நோய் ஏற்பட்டாலும், மஞ்சள் செடிக்கு அதிக பாதிப்பில்லை.

விதைத்து 8-10 மாதங்களுக்குப் பிறகு இலைகள் மஞ்சள் நிறமாகி காவித்தன்மையாக வரும்போது, விளைச்சலின் பயனைப் பெறமுடியும். இதில் ஒரு ஹெக்ரெயருக்கு 15-20 மெற்றிக்தொன் அளவு மஞ்சள் கிடைக்கும்.

உற்பத்தியான கிழங்குகளை அவித்து காயவிட்டு எடுக்க வேண்டும். அதாவது கிழங்கில் ஒட்டியிருக்கும் மண்ணை கழுவிப் பாத்திரமொன்றில்போட்டு, 30 நிமிடம் அவித்துக் கொள்ளவேண்டும். அவிப்பதற்கு முன்னா கிழங்கு ஒன்றை துண்டுதுண்டாக வெட்டிக்கொள்ள வேண்டும். வெட்டிய துண்டுகளை 6-7 நாட்கள் வெயிலில் காயவைத்து தேவைகளுக்கு எடுக்கலாம். மேலும் மஞ்சளை ஏற்றுமதி செய்வதற்கு வியாபார நிறுவனங்கள் முன்வருகின்றன. இதனால் விவசாயம் செய்யாத ஈரத்தன்மையான இடங்களில் மஞ்சள் உற்பத்தியை மேற்கொண்டால் நல்ல வருமானத்தைப் பெறமுடியும்.

நன்றி - லங்காதீப

தமிழாக்கம் - சசி

# தொழில் வங்கி



| நிறுவனம் | வெற்றிடமாகவுள்ள பதவிகள் | அடிப்படைத் தகுதி | முடிவு திகதி |
|---|---|---|---|
| முகாமைத்துவ தொழிநுட்ப பீடம், மொறட்டுவ பல்கலைக்கழகம், மொறட்டுவ. | விரிவுரையாளர் தரம் - I விரிவுரையாளர் தரம் - II | விஞ்ஞானமாணி/ முகாமைத்துவ நிர்வாக மாணி/ பொருளியல் சிறப்புப் பட்டதாரி. தொழில்நுட்ப முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவ கணக்கியற்துறையில் ஏதாவது ஒன்றில் பட்டப்படிப்பு | 17.05.2004 |
| சர்வதேச கெயர் நிறுவனம், 7/A கிறகொறிஸ் வீதி, கொழும்பு - 07 | மனித வள இயக்குநர் | மனிதவள முகாமைத்துவப் பட்டதாரி. குறைந்தது ஏழு வருட அனுபவம். ஆங்கிலம், கணினி அறிவு. | 13.05.2004 |
| யூனியன் வங்கி அல்பிரட் பிளேஸ், கொழும்பு - 03. | தகவல் தொழில்நுட்ப பகுதித் தலைவர் | கணினித்துறைப் பட்டதாரி. வலைப்பின்னல் மற்றும் முகாமைத்துவ துறைசார் 10 வருட அனுபவம். | 10.05.2004 |
| HSBC வங்கி 24,சேர் பரோன் ஜெயதிலக்க மாவத்தை, கொழும்பு - 01. | முகாமைத்துவக் கணக்காளர் | கணக்கியற்துறைசார் உயர்கற்கை நெறிக்கான சான்றிதழ். (CIMA / ACCA / ICACL) | 16.05.2004 |
| ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் 12, கோவெர் வீதி, கொழும்பு - 05 | நிர்வாகக் கணக்கியல் உதவியாளர் | கணக்கியற்துறைப் பட்டதாரி. ஆங்கிலப் புலமை. மூன்று வருட அனுபவம். | 08.05.2004 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறவிரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்



| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 50/= | 60/= | 80/= | 50/= | 100/= | 100/= |
| வெண்டிக்காய் | 30/= | 40/= | 50/= | 45/= | 35/= | 30/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 70/= | 60/= | 65/= | 60/= | 80/= | 70/ |
| கத்தரிக்காய் | 40/= | 30/= | 40/= | 40/= | 45/= | 30/= | 40/= |
| பாகற்காய் | 80/= | 45/= | 60/= | 80/= | 40/= | 40/= | 70/= |
| கரட் | 50/= | 50/= | 60/= | 60/= | 40/= | 60/= | 60/= |
| பீற்றூட் | 15/= | 30/= | 40/= | 10/= | 10/= | 20/= | 20/= |
| முருங்கக்காய் | 40/= | 45/= | 30/= | 20/= | 35/= | 40/= | 10/= |
| வெங்காயம் | 45/= | 40/= | 50/= | 30/= | 35/= | 35/= | 40/= |
| பச்சை மிளகாய் | 45/= | 60/= | 80/= | 45/= | 40/= | 60/= | 50/= |



# புத்தகம் கட்டுதல்

புத்தகம் கட்டுதல் இந்தக் காலத்தில் மிகவும் நல்ல வருமானம் தரக்கூடிய ஒரு தொழிலாகும். ஓரளவுக்கு புத்தகம் கட்டும் முறையைப் பழகிக்கொண்டு, அதையே முழு நேர வேலையாகவும் வைத்துக்கொள்ளலாம்.

வசதிவாய்ப்புகள் உள்ளவர்கள் புத்தகத்தின் ஓரங்களை வெட்டும் இயந்திரம் ஒன்றினை வாங்கிக் கொள்வது இலாபத்தை அதிகப்படுத்தும்.

புத்தகம் கட்டுதல் முழு நேரத் தொழிலாக வைத்துக் கொள்ளும்போது, புத்தகம் வெளியிடும் நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு ஆயிரக்கணக்கில் அவர்கள் வெளியிடும் புத்தகங்களை கட்டிக் கொடுக்கும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

குறிப்புப் புத்தகங்கள் தயாரிப்பது ஒரு பெரிய தொழிலாக இருக்கிறது. குறிப்புப் புத்தகங்கள் தயாரிப்பவர்களிடம் ஒப்பந்தம் செய்துகொண்டு, அவர்கள் தயாரிக்கும் குறிப்புப்புத்தகங்களை கட்டிக் கொடுக்கும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

பாடசாலைகள் திறக்கப்பட்ட ஆண்டுத் தொடக்கம் பாடங்கள் தொடங்கப்படும்போது பெருமளவு மாணவர் தங்கள் பழைய, புதிய புத்தகங்களை கட்டுவதற்கு முயற்சி செய்வார்கள். அந்தச் சமயத்தில் புத்தகங்களை கட்டிக்கொடுக்கும் பணியைச் செய்ய வேண்டியிருக்கும்.

அந்தச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம். புத்தகம் கட்டும் வேலைகள் அதிகமாக வரும்போது, வேலையாட்களை அமர்த்திக்கொண்டு சமாளிக்கலாம்.

புத்தகம் கட்டும் தொழில் செய்வதற்கு எமக்கு பயிற்சி இருந்தால்தான் அந்தத் தொழிலினைத் திறம்படச் செய்யமுடியும்.

புத்தகம் கட்டுகின்ற ஆட்களை வைத்து நிர்வாகம் செய்து வரும் போது, கூடுதலான அனுபவம் பெறப்படும்.

என்றாலும், புத்தகம் கட்டும் முறை எமக்குத் தெரியாவிட்டால், அதை ஒரு குறையாகக் கருதாமல், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டும் தொழில் செய்யலாம். *

நாடக விமர்சனம் ~ யதார்த்தன் ~

# காலத்தின் தேவை கருதி அரங்கேறிய பண்டாரவன்னியன் நாடக ஆற்றுகை

**அளவெட்டி மகாஜனசபையால் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் கலாசார நிலைய வளர்ச்சிக்காக நடாத்தப்பட்ட நாடக விழாவில் அளவெட்டி மகாஜன சபை கலைஞர் வட்டத்தினரால் மேடையேற்றப்பட்ட 'அடங்காத் தமிழன் பண்டாரவன்னியன்' எனும் நாடகம் பற்றிய விமர்சனம்**

காட்டிக்கொடுப்புக்களும், துரோகத்தனங்களும் மலிந்துவிட்ட தற்போதைய நிலையில் அளவெட்டி மகாஜன சபை கலைஞர் வட்டத்தினர் - தமது கன்னித் தயாரிப்பான 'அடங்காத் தமிழன் பண்டாரவன்னியன்' எனும் மேடைநாடகமொன்றை அரங்கேற்றியுள்ளனர்.


கடந்த 17-04-2004 அன்று சனிக்கிழமை அளவெட்டி மகாஜனாசபையினால் நடாத்தப்பட்ட நாடக விழாவிலே இந்த நாடகம் மேடையேறியுள்ளது. நாடகத்தை கண்டுகளித்த ரசிகர்களுள் பெரும்பாலானோர் இதனையொரு கன்னித் தயாரிப்பு என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். அந்தளவிற்கு அற்புதமாக அரங்க ஆற்றுகை செய்யப்பட்டிருந்தது.

காதல், வீரம், வேகம், காட்டிக்கொடுப்பு, நயவஞ்சகம் என்னும் அம்சங்களை உள்ளடக்கிய - வீரமிக்க வசனங்கள், உணர்ச்சிமிகு பாடல்வரிசைகள், மயிர்கூச்செறியும் சண்டைக்காட்சிகள் என அத்தனை சுவைகளையும் உள்ளடக்கிய அற்புதப் படைப்புதான் அடங்காத் தமிழன் பண்டார வன்னியன்.

இந்த நாடகத்தின் ஆசிரியர் - முல்லைமணியின் வசனங்களை தவிர்க்கமுடியாத நிலையில் திருத்தங்களை மேற்கொண்டும், அரங்க வெளிப்பாட்டுக்கு ஏற்ற வகையில் சாட்சி அமைப்புக்களிலும் மாற்றங்களைச் செய்து, பார்ப்போரைக் கவரும் விதத்தில் அடங்காத் தமிழன் பண்டாரவன்னியனை அரங்கம் ஏற வைத்த அளவெட்டி மகாஜன சபைக் கலைஞர்களைப் பாராட்டி, வளரும் கலைஞர்களை தட்டிக்கொடுப்பது எம் அனைவரதும் கடமையாகும்.

சரித்திரத்தைத் தங்கள் செங்குருதியில் மாற்றியெழுதிய எமது முன்னோர்களின் முதன்மையானவனான பண்டாரவன்னியனை, தமது கன்னி நாடகத்தின் கதையின் கருவாக்கிய கலைஞர்களுக்கு, தமிழ் உலகு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. ஏனெனில், இன்று வரலாற்று நாடகங்கள் எனும் போர்வையில் மேடையேறும் நாடகங்களுள் பல எம்மோடு தொடர்புபடாத, வெறும் கலை ரசனைக்கு மாத்திரம் கண்டுகளிக்கக் கூடியதாகவே உள்ளன. இந்த நிலை மாற்றமடைந்து, எமது வீரம் பதிந்த வரலாறுகளையும், தியாகம் செறிந்த சரித்திரங்களையும் கலை வசனமிக்க வகையில் மேடையேற்றுவது காலத்தின் கட்டாயமாகும். இந்தப் பரிணமிப்பை நாம் அளவெட்டி மகாஜன சபை கலைஞர் வட்டத்தினரிடம் எதிர்பார்க்கலாம் போலுள்ளது.

அவர்கள் தமது நாடக முன்னுரையிலே இதற்கான உறுதிமொழியை வழங்கியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால், இந்தக் கடினமான முயற்சியிலே இறங்கியுள்ள இளம் கலைஞர்களின் கலைப் பயணம் - குறித்த இலக்கைச் சென்றடைவது பார்வையாளர்களின் கைகளிலேயே உள்ளது.



ஒரு கலைஞனின் வெற்றிப் பாதையின் படிக்கட்டுக்களாக அமைபவை - கலை ஆர்வலர்களின் பாராட்டுக்களும், தட்டிக் கொடுப்புக்களும்தான். கலைஞனின் வளர்ச்சியின் ஏணிப்படிகள் - அவனுக்கு கிடைக்கும் கரகோசங்களும், வாழ்த்துக்களும்தான். இதைக் கலைஞர்களுக்கு எமது சமூகம் வழங்கி ஊக்குவிக்கவேண்டும். இசைக் குழுகளில் திரண்டு நின்று விசில் அடிப்பதைத் தவிர்த்து, பயன்மிக்க கலைப்படைப்புக்களை வரவேற்கவேண்டும்.

அடங்காத்தமிழன் பண்டார வன்னியன் நாடகத்தை ரசித்த மக்கள் - தமது உணர்வுகளை அப்படியே நாடகததினுள் செலுத்தியிருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. திரையிலே வீரபாண்டிய கட்டப் பொம்மனைக் கண்டு, புல்லரித்த மக்களில் இளம் சந்ததியினர் பலருக்கு, எமது மூதாதை பண்ராடவன்னியனைத் தெரியாமல் இருப்பது வேதனையான விடயமாகும்.

பண்டாரவன்னியன் நாடகத்தைப் பார்த்த மக்கள் பலர் - அவனது வீரத்தையும், அந்நியருக்கு அடங்காப்பற்றையும், தியாகத்தையும் கண்டு திகைத்துவிட்டனர். பண்டார வன்னியனும், வீரபாண்டிய கட்டப்பொம்மன் போலல்லவா இருந்துள்ளான் என வியந்துள்ளார்கள். இதற்கு பண்டாரவன்னியன் வேடமேற்ற கலைஞனின் நடிப்பாற்றலும் ஒரு காரணமாகும். அனுபவமிக்க நாடகக் கலைஞரும் ஆசிரியருமான ச.கிருபானந்தனே பண்டாரவன்னியன் வேடத்தை ஏற்று நடித்தார். அவரது உணர்ச்சிமிக்க நடிப்பும், பாத்திர அமைவுமே நாடகத்தின் முதுகெலும்பாக அமைந்திருந்தது.

ஏனைய கலைஞர்கள் பலருக்கும், இந்த நாடகம் கன்னிக் களமாக இருந்தாலும், அவர்களும் தமது திறமையைச் சிறப்பாக வெளிக்காட்டியிருந்தனர். நாடகத்திற்கு உயிர் சேர்த்ததில் வீரமிக்க வசனங்களுக்கு முக்கிய இடமுண்டு. ஆங்கிலேயத் தளபதியுவெலை - பண்டாரவன்னியன் சந்தித்த போது, தளபதி வரி கேட்க... அதனை செலுத்தப் பண்டாரவன்னியன் மறுக்க... இனி வன்னிநாடு அழியும் வரை போர்க்களம்தான் என ஆங்கிலேயத் தளபதி சூளுரைக்க... அதனை மறுத்து பண்டார வன்னியன் பேசும் வசனம் - மக்களின் செவிகளுக்கு எட்டின் அவர்கள் உள்ளம் குளிரும்.

'வெள்ளையனே வெறும் பேச்சை நிறுத்து. எந்த இனமாய் இருந்தாலும், வந்தோரை வரவேற்று வான்புகழ் கொண்டது வன்னிநாடு. அதனால், சற்றுப் பொறுத்தோம். பொறுமையின் அருமையைப் புறக்கணித்தால், கருவறுக்கும் வரை கன்னித் தமிழ் வன்னிநாடு கண்விழித்திருக்கும், வானமே இடிந்து தலையில் வீழ்ந்தாலும், இந்த வையகமே திரண்டு எதிர்த்தாலும், மலை கலங்கினாலும் நிலை கலங்காத வன்னித் தமிழன் பண்டாரவன்னியனின் வன்னிநாட்டு மக்களிடம் துப்பாக்கியைக் காட்டி கலங்கவைக்க முடியாது என்ற உணர்ச்சிமிக்க வசனம் -



எவ்வளவு யதார்த்தமானது, உண்மையானது என்பதை - அண்மைய காலத்து தமிழீழப் போர்க்களங்களில் பறைசாற்றி நிற்கும் எல்லைப்படை, துணைப்படையெனத் திரண்ட மக்கள், அந்த வசனத்திற்கு உயிர் கொடுத்தவர்கள் என்பதை மறுக்கமுடியாது.

இந்த நாடகத்திலே முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான் , கர்ப்பூரப் புல்வெளி, பனங்காமம், புதுக்குடியிருப்பு என வன்னிப் பெருநிலப்பரப்பின் முக்கியமான இடங்கள் வந்து போவதனால், நாடகத்தை பார்க்கும் மக்களில் பலர் - அந்த இடங்களில் வாழ்ந்து வந்தமையாலும், எமது வரலாற்றின் ஆழம் மக்கள் இதயங்களோடு இறுகப் பிணைந்து விடுகிறது. இந்த நாடகத்தை பண்டார வன்னியனின் பிறப்பிடமான பனங்காமத்திலும், அவனது செங்குருதி சிந்திய கற்சிலைமடு மண்ணிலும், வீரச்சுவடு பதிந்த வன்னி மண்ணிலும் மேடையேற்றப்படவேண்டும். இதற்கு அப்பகுதி பொதுமக்களோ அல்லது கலைத்துறைசார் அமைப்புக்களோ நடவடிக்கை எடுக்கவேண்டும்.

துரோகி கருணாவின் பிரச்சினை பேசப்படும் வேளையிலே, காக்கை வன்னியனைக் காணும்போது, காறிஉமிழத் தோன்றுகிறது. அவனது நயவஞ்சகத்தினால் பண்டாரவன்னியன் உயிர் துறக்கும்போது, எம்மையறியாமல எழும் சோகவுணர்வு சொல்லிலடங்காதது. மார்பினிலே குண்டேந்தி பண்டார வன்னியன் வீழ்ந்து கிடக்க, திரைமறைவிலிருந்து ஓரு உருக்கமான பாடல் எழுகிறது.

**உன்னிறுதி மூச்சுவரை நாட்டின் மானம்**
**ஒன்றினையே காப்பதற்குச் சபதம் பூண்ட**
**மன்னவனே! போர்க்களத்தில் வீரம் காட்டி**
**வானுலகம் புகுந்து புகழ் மண்ணில் விட்டாய்**
**இந் நிலத்தில் பிறர்க்கடங்காப் பற்றை எங்கள்**
**இரத்தத்தில் ஊட்டிய நீ பிரிந்தாலும் எம்**
**வன்னி நிலம் அந்நியருக்கு அடங்காதெனும்**
**வாய்மைதனை அடக்கிவிட முடியாதையா..!**

என்பதே அப்பாடலாகும். இந்தப் பாடலுக்கு தனது இனிமையான குரல் வளத்தால் அணி சேர்த்த சங்கீத பூசணம் லி.கே.நடராஜா - சோகம் ததும்பும் தனது குரல் வளம், காட்சியோடு ஒன்றிப் போன மக்கள் கண்களில் நீரை வரவழைக்கின்றார்.

இவ்வாறு அடுக்கிக்கொண்டு போகக்கூடியளவிற்கு நிறைவுகள் இருப்பினும், சில குறைகளையும் சுட்டிக்காட்டியே ஆக வேண்டும். அதில் மிகவும் முக்கியமானது - காட்சிகளுக்கு இடைப்பட்ட இடைவெளி நீண்டதாக இருந்தமை. இது காலப் போக்கில் சீர்செய்யப்பட வேண்டும். மேலும் கலைஞர்களுக்கு வசனங்கள் மனப்பாடம் சற்றுக் குறைவாகவேவுள்ளது. ஆனாலும், அதை அவர்கள் வெளியே பெரிதாகக் காட்டிக்கொடுக்கவில்லை சமாளித்து விட்டார்கள். ஆனால், சில இடங்களில் அந்தத் தவறு வெளிப்பட்டு விடுகிறது. இதனையும் கலைஞர்கள் நிவர்த்தி செய்ய வேண்டும்.

மொத்தத்தில் சொல்லப்போனால், மகாஜனசபை கலைஞர் வட்டத்தினர் தமது கடின உழைப்பினாலும், கலைத்திறமையாலும் நல்லதொரு காவியத்தை யாத்துள்ளார்கள். விவேகமும், வேகமும், துடிப்பும் மிக்க இந்தக் கலைஞர்களிடமிருந்து இன்னும் பல பயன்மிக்க படைப்புக்களை, தமது கலை வடிவங்களை வெளிக்கொணர உழைக்க வேண்டும்.

அளவெட்டி மண் பல கலைஞர்களைப் பிரசவித்த மண். ஒரு காலத்திலே கலையின் கருவூலமோ என எண்ணவைத்த மண். போரினால் பொழிவிழந்து, தனது கலைப் புத்திரர்களைக் கை நழுவவிட்ட அளவை மண் - 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' எனும் மஹாகவியின் வாக்குப்போல, அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டம் மூலமாக இனியும் பல கலைஞர்களை வழங்க இருக்கும் செய்தி இனிப்பானதாக உள்ளது.

**- நாமும் நமக்கோர்**
**நலியாக் கலையுடையோம் -**


---

செய்திக் கட்டுரை சி.சந்தானகுமாரன்

# மருதனார்மடம் சந்தை... நவீன சந்தையாக மாறுமா?

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மரக்கறி கொள்வனவு, விற்பனவு நிலையங்களுள் மருதனார்மடம் சந்தை இன்று மிகவும் பிரபலமடைந்து காணப்படுகின்றது.

ஒரு காலத்தில் சுன்னாகம், சாவகச்சேரி சந்தைகளே குடாநாட்டில் (இலங்கையில்



என்றால்கூட மிகையாகாது) பிரபலமிக்க சந்தைகளாக விளங்கின. தென்பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள் பலரும் இந்த இரண்டு சந்தைகளில் தமது உற்பத்திப் பொருட்களை விற்பதற்காக் கொண்டு வருவார்கள். அன்றிலிருந்து 1995 ஆம் ஆண்டு பாரிய இடப்பெயர்வை சந்திக்கும்வரை இந்த இரு சந்தைகளும் வியாபாரத்துறையில் மிகவும் முன்னணி வகித்து வந்தன.

1995 இல் மக்கள் இடம்பெயர்ந்து சென்றதன் பின்னர் சுன்னாகம் சந்தை இராணுவ அரணுக்குள் அப்பொழுது அகப்பட்டுக் கொண்டது. இக்காலப்பகுகுதியில் மருதனார்மடம் சந்தை - இராணுவ அரணுக்கு வெளியே இருந்தமையால், மக்கள் மீண்டும் வலிகாமத்திற்கு திரும்பி வந்து, தமது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடக் கட்டுப்பாடு எதுவும் காணப்படாததனால், சுதந்திரமாகச் சென்றுவர முடிந்தது. இதனால் மருதனார்மடம் சந்தை முக்கிய இடத்தைப் பிடிக்கத்தொடங்கியது.

கோவில்கள், பாடசாலைகள், கடைகள், தோட்டங்கள், போக்குவரத்து வசதிகள் யாவும் ஒருங்கே அமைந்த- மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இந்தச் சந்தை அமைந்துள்ளமையால், குடாநாட்டில் இன்று மிகவும் பிரபல்யம் வாய்ந்த சந்தையாகவும், சகல இடத்திலிருந்தும் வருகை தரும் வியாபாரிகள் இங்கு மலிவான விலையில் பொருட்களை பெற்றுச்செல்லும் இடமாகவும் விளங்குகிறது.

கடந்த 8 வருடங்களாக வியாபாரத் துறையில் முன்னேறறமடைந்து, குடிநீர் கடைத்தொகுதிகள், கழிவுநீர் ஓடக்கூடிய வசதிகள் எதுவும் அற்று, கவனிப்பார் அற்ற நிலையில் இந்தச் சந்தை இன்றும் காணப்படுகின்றது. மழைகாலத்தில் சந்தைக்குள் சென்று பொருட்களை வாங்குவதென்றால், மாட்டுக்கொட்டிலுக்குள் செல்வதைப்போலவேயுள்ளது. இங்குள்ள கட்டடங்கள் பலவும் 50 வருடங்களுக்கு முற்பட்டவை.



இவற்றிலிருந்து வியாபாரிகள் பொருட்களை விற்பனை செய்வது மிகுந்த கஷ்டமே. அத்துடன், வெற்றிலை வியாபாரிகள், பழங்கள் விற்பவர்கள் - அசுத்தமான இடத்திலும், ஓலையால் வேய்ந்த உரைப்பைகளால் கூடாரமிட்டும் தான் தமது வியாபாரச் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

இதுமட்டுமன்றி, வாழைக்குலை விற்பவர்கள் - வெட்டவெளியான இடத்திலேயே தமது வியாபாரச் செயற்பாடுகளை செய்ய வேண்டியுள்ளது. இங்கு கொண்டுவரப்படும் துவிச்சக்கரவண்டிகளைப் பாதுகாப்பதற்கென பிரத்தியேகமான இடங்களோ, கூடார வசதிகளோ இல்லை. அத்துடன் சந்தையின் வடக்கு-கிழக்கு நுழைவாயில்கள் மிகமிக ஒடுக்கமாகவும், அவற்றிற்கு அருகிலும் வியாபாரிகள் விற்பனையில் ஈடுபடுவதால், போக்குவரத்துக்கு மிகவும் நெருக்கடி ஏற்படுகின்றது.

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட உடுவில் உப அலுவலகத்திற்கு மிக அருகில் அமைந்திருந்தும் - இன்றுவரை நவீன சந்தையாக, மாடிக் கட்டடத்துடன் பல கடைத்தொகுதிகளைக் கொண்ட கவர்ச்சிமிக்க இடமாக மாற்றப் படாதிருப்பது மிகவும் மனவேதனைக்குரியது. 1987 இல் இந்திய இராணுவத்தினரின் தாக்குதலுக்கு உள்ளான கட்டடங்களைக்கூட இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

இவற்றையெல்லாம் அப்புறப்படுத்தி, நவீன தோற்றத்தில் சந்தைக் கட்டடம் கட்டப்படுமேயானால், தற்போதுள்ள கடைக்காரர் மட்டுமல்ல பல புதிய கடைக்காரர் கூட வரவாய்ப்புண்டு. எமது பிரதேசத்தை நாமே முன்னேற்ற வேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்குவர். மனமுண்டானால் கட்டாயமாக இடமுண்டு. (101)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கொலையிற் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்*
*களைகட்டு அதனொடு நேர்.*
திருக்குறள்

# நமது நோக்கு

## புதிய சமாதான முயற்சிகளும்... சில முக்கியமான அறிவுறுத்தல்களும்!

நிறைவேற்று அதிகார பலமமிக்க ஜனாதிபதி சந்திரிகாவின் தலை மையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் அமைத் துள்ள உறுதியான அறுதிப்பெரும்பான்மைப்பலமற்ற அரசு ஆட்சிப பொறுப்பை ஏற்று ஒரு மாத காலம் முடிந்துள்ள நிலையில் மீண்டும் இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுவார்த்தை களை விடுதலைப்புலிகளுடன் ஆரம்பிப்பதற்கு நோர்வே அரசின் அனுசரணையைக் கோரியதும், நோர்வே அதனை ஏற்றுக் கொண்டு அதற்கான செயற்பா டுகளில் இறங்கியது மட்டுமல்ல ஜனாதிபதியின் ஆலோசகரும், வெளியுறவு அமைச்சருமான லகஷ்மன் கதிர்காமர் தமிழரின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளை ஏற்று பேச்சுவார்த் தைகளை அரசு ஆரம்பிக்கும் என இந்தியாவில் வைத்து அறிவித்துள்ளதும் கூட எதிர்பாராத அரசியல் திருப்பங்களேயா னாலும் ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ள இந்த அரசியல் கருத்து நிலைமாற்ற மானது ஒரு அதிரடி நடவடிக்கையாக அமைந்துள் ளதில் பல்வேறு சந்தேகங்களும் எழவே செய்கின்றன.

சரியாக ஒரு மாதத்திற்கு முன்பு கூட அதாவது, தேர்தல் காலத்தில் சமாதான முயற்சிகளின் எதிர்கால நகர்வுகள் குறித்த நம்பிக்கையை எந்தவகையிலும் ஏற்படுத் தாத பிரசாரங்களையே ஜனாதிபதியும், அவரது கட்சிப் பிரமுகர்களும் மேற்கொண்டதுடன் கடந்த ஐ.தே.க முன்னணி அரசுகால சமாதான முன்னெடுப்புகளின் போது நோர்வே வகித்த பங்கினை நிராகரித்தும், கொச்சைப்படுத்தியும், அவம தித்தும் பேசியதுடன் அவர்கள் விடுதலைப்புலிகளுக்கு சார்பா கச் செயற்பட்டனர் எனக்குற்றம் சாட்டியிருந்தனர்.

அதுமட்டுமல்ல, இனிவருங்காலப் பேச்சுவார்த்தைகள் விடுதலைப்புலிகளுடன் மட்டுமல்லாது ஏனைய தமிழ்க்கட்சிகள், குழுக்கள் ஆகியவற்றையும் இணைத்தே மேற்கொள்ளப்படும் என்று வெளிப்படையாகவே பிரகடனம் செய்ததுடன் அத்த கைய எதிர்கால அமைதி முயற்சிகளில் இந்தியா முழுமையாகப் பங்கேற்கும் எனவும் ஏனைய வெளிசக்திகள் அதில் தலையிட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் கூறிவந்தனர்.

ஆனால், தேர்தல் முடிந்து ஆட்சிப்பீடம் ஏறி ஒரு மாதகாலம் முழுமையாக முடிவதற்குள் மேற்கூறிய அனைத்து கருத்து நிலைப்பாடுகளும் தலைகரணமாக மாறிவிட்டது. அல்லது மாற்றவேண்டிய சூழலோ, அழுத்தமோ அரசுக்கு ஏற்பட்டு விட்டது.

புதிய அரசு எதிர்கொள்ள வேண்டியிருக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகளுக்குள் மிக முக்கியமானது நாட்டை மிகவும் மோசமான நிலைக்குள் சிக்கவைத்துக் கொண்டிருக்கும் பொருளாதார - நிதி பற்றாக்குறையேயாகும்.

சுதந்திரமடைந்த காலம் முதலே அயல் மற்றும் அந்நிய நாடுகளையும் சர்வதேச நிதியுதவிகளைச் செய்யும் அமைப்புக் களையும் நம்பி மட்டுமே இலங்கை அரசு தனது நிதி நெருக்கடி களைச் சமாளித்து வந்துள்ளது ஒன்றும் இரகசியமான விடயமேயல்ல.

1980 களின் மத்தியில் ஆரம்பித்து 2000 ஆம் ஆண்டுவரை நடந்த உள்நாட்டுப் போரின் போது நாட்டின் வளங்கள் அனைத்தையும் தமிழினத்தை அழிக்கவும், தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து அபகரிக்கவும் கண்ணைமூடிக் கொண்டு செலவிட்டதுடன் மேலதிகமாக கோடி டொலர்களைக் கடன் வாங்கியும் போரைத் தொடர்ந்த சிங்கள ஆட்சியாளர்களின் இனவெறித்தனமான, தீர்க்கதரிசனமற்ற செயற்பாடுகளால் நாட்டின் பொருளாதார வளம் அதலபாதாளத்தினுள் வீழ்ந்து எழமுடியாது அப்படியே இன்னமும் கிடக்கின்றது.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கால சமாதான முயற்சிகளின் அடிப்படையிலான போர்நிறுத்த உடன்பாடு காரணமாக ஏற்பட்ட மாற்றங்கள் ஒரு நம்பிக்கையான சூழலை மெல்ல உருவாக்க முயன்ற போதும் ஜனாதிபதியின் தொலைநோக்கு சிந்தனையற்ற நடவடிக்கையால் அதுவும் சாத்தியமற்றதாகிவிட்ட நிலையில் இன்றைய புதிய அரசியல் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் வேறுபல குழப்பங்களை பொதுமக்களின் குறிப்பாக, தமிழ் மக்களின் மனங்களில் ஏற்படுத்தவே செய்கின்றது.


இதனடிப்படையில் புதிய சமாதான முயற்சிகளை அரசானது வேறு வகையிலான உள்நோக்கங்களுடன் வேகவேகமாக செயற்படுத்த முனைகின்றதா என்பது தமிழ் மக்களின் மனதை அரிக்கும் புதிய பிரச்சினையாகியுள்ளது.

- இதன் காரணமாகவே புதிய சமாதானப் பேச்சுக்கள் ,
- விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் ஆரம்பிக்கவேண்டும்.
- தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் என்பதை ஏற்றுக் கொண்டு அவர்களுடன் மட்டுமே பேச்சுக் களை தொடங்கவேண்டும்.
- பேச்சுக்கள் அர்த்தபுஷ்டியாகவும் குறித்த நோக்கத்தை எட்டுவதை உறுதிசெய்வதாகவும் அமையவேண்டும்.
- போர்நிறுத்தத்தை நேர்மையாக அரசு கடைப்பிடிக்க வேண்டும்.
- அரசு தனக்குள்ள பலவீனத்தை சமாளிக்கவும், வௌ நாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் பேச்சுவார்த்தையை ஒரு தந்திரோபாயமாகப் பயன்படுத்தக் கூடாது - என்ற அம்சங்களின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அவர்களைச் சந்தித்த தமிழ்க் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் வலியுறுத்தி யுள்ளனர்.

இவைகள் யாவும் சரியானதும், நியாயமானதுமான கோரிக் கைகளேயாகும் நிபந்தனைகளல்ல.....

கடந்த கால பட்டறிவு அனுபவங்கள் எழுப்பும் சந்தேகங் கள் யாவும் தீர்க்கப்படாமல் புதிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதானது அது நம்பகமான - ஆரோக்கியமான வகையில் தொடர்வதற்கு வழியாகாது என்பதுடன் புரிந்துணர் வுடன் கூடிய உறுதியான முடிவுகளை எட்டவும் சாத்தியமற்றுப் போய்விடும் என்பதையும் கூறிவைப்பது இந்த நிலையில் அவசியமாகின்றது.

# நாடும் நடப்பும்




# உதவிவழங்கும் நாடுகளின் தூதர்களை தமிழரசுக்கட்சியினர் சந்திக்கவுள்ளனர்!

தமிழரசுக் கட்சியினர் விரைவில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இலங்கை தூதுவர்களையும், உயர்ஸ்தா னிகர்களையும் சந்திக்கவுள்ளனர்.

இதன்போது, இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வின் அடிப் படையிலேயே தென்னிலங்கைக்கான நிதி உதவிகள் வழங்கப் படவேண்டும் என்பதை அவர்கள் வலியுறுத்தவுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங் களைப் புனரமைப்பதில் நிதி வழங்கும் நாடுகள் முன்னுரிமை தரவேண்டும். அதேநேரம், அந்த நிதி வடக்கு - கிழக்கின் இடைக்கால தன்னாட்சி அமைப்பு உடனடியாக அமைக்கப் பட்டு, அதற்கூடாக வழங்கப்படவேண்டும் அல்லது வடக்கு- கிழக்குக்கான நிதியுதவிகள் நேரடியாக அந்த பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தவேண் டும் என தாம் இந்த சந்திப்பின்போது கேட்கப்போவதாகத் தமிழரசுக் கட்சியின் செயலர் மாவை சேனாதிராஜா தெரிவித் தார். இதேவேளை, தமது கட்சி ஏனைய நாடுகளின் இராஜ தந்திரிகளையும் சந்தித்து தமிழர் நிலைப்பாட்டை தெளிவு படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதியை சந்தித்த பின்னரே எமது நிலைப்பாட்டைத் தெரிவிப்போம்!

### விமல் வீரவன்ச கூறுகிறார்



அரசு - புலிகள் பேச்சு குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்திய பின்னரே, நாம் எம் நிலைப்பாட்டை வெளி யிடுவோம். ஜனாதிபதியுட னான பேச்சுவார்த்தை அடுத்த சில தினங்களுக்குள் நடை பெறும் என ஜே.வி.பியின் பிர சார செயலாளர் விமல் வீர வன்ச தெரிவித்தார்.

நோர்வேயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நாம் முற்றாக நிராகரிக்கவில்லை. ஆனால், நோர்வே நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ள மத்தியஸ் தத்தின் வரையறைக்குள் இருந்து அவர்கள் விலகிச்சென்ற போதே நாம் அதனை கண்டித்தோம் என்றும் விமல்வீரவன்ச தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை வந்துள்ள நோர்வே தூதுக்குழு வினருடன் ஜனாதிபதி நடத்திய பேச்சுவார்த்தை குறித்து ஜனாதிபதி - ஜே.வி.பி உட்பட அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் விளக்குவார் என அமைச்ச ரவை வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

## கந்தப்பொல சம்பவம் குறித்து விவாதிக்க ஒத்திவைப்பு பிரேரணைக்கு முன்னறிவித்தல்

### மகேஸ்வரன் எம்.பி. விடுத்துள்ளார்

நுவரெலியா - கந்தப்பொலயில் தமிழருக்கு எதிராக நடை பெற்ற வன்முறைகள் குறித்து நாடாளுமன்றத்தில் ஒத்திவைப் புப் பிரேரணை ஒன்றினை கொண்டு வருவதற்கான முன்னறி வித்தலை ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இந்து கலாசார அமைச் சருமான தி.மகேஸ்வரன் - சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டாரவிடம் விடுத்தார்.

கடந்த திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் சபாநாயகர் லொக்கு பண்டாரவை சந்தித்துப் பேசியபோதே அவர் இதற் கான முன்னறிவித்தலை விடுத்தார். நாடாளுமன்றம் எதிர்வரும் 18 ஆம் திகதி கூடும்போது இதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று சபாநாயகரிடம் கோரினார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுகந்திர முன்னணி அரசாங் கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை 3 மாதத்திற்குள் நிறைவேற்றவேண்டும். இல்லையேல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைக் கைப்பற்றும்.

உரத்தின் விலையை அரசாங்கம் 350 ரூபாவாக குறைக்க வேண்டும், சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு மீள வேலை வழங்கப்படவேண்டும், 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப் படவேண்டும். இவற்றை அரசாங்கம் உடனடியாக செய்யாமல்விட்டால், ஆட்சியை நாம் கைப்பற்றுவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈழ இராச்சியம் உருவாவதை ஹெல உறுமய தடுக்குமாம்

### பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிப்பு

ஈழ இராச்சியம் உருவாவதைத் தடுக்கக்கூடிய ஒரே யொரு சக்தியாக தாமே விளங்குவதாக ஜாதிக ஹெல உறு மய தெரிவித்துள்ளது. ஜாதிக ஹெல உறுமயவின் தலைமை யகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாடடிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடை யில் இடம்பெற்ற யானை, புலி ஒப்பந்தத்தைப் போன்று இன்று வெற்றிலை - புலி ஒப்பந்தத்தின் மூலம் ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியும் விடுதலைப் புலிகளும் நாட்டைத் துண்டாட முனைவதாக அத்துரெலிய ரத்தின தேரர் இந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஈழ இராச்சியம் உருவாகுவதைத் தடுத்து நிறுத்தக்கூடிய ஒரு சக்தியாக தமது கட்சியான ஜாதிகஹெல உறுமய விளங்குவதாகவும் அவர் தெரிவித்தார். பக்கச்சார்புத் தன்மையுடன் செயற்படுகின்ற நோர்வே இலங்கையின் சமா தானச் செயற்பாடுகளில் மீண்டும் ஈடுபடுவதை தமது கட்சி வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு அடிப்படை உளவியல் பயிற்சிகள்

### 17 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதிவரை நடைபெறும்

யாழ்.மாவட்டத்தில் கடமைபுரியும் சமுர்த்தி உத்தியோகத் தர்களுக்கு அடிப்படை உளவியல் பயிற்சிநெறி ஒன்று வழங் கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறி இந்தமாதம் 17 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் சாந்திக உளவள நிலையத் தில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வில் பங்குபற்றுவதற்கு ஒவ்வொரு பிர தேச செயலகத்திலிருந்தும் இரண்டு சமுர்த்தி உத்தியோ கத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (122)

### ஹெல உறுமயவின்

## எம்.பிக்களுக்கு எதிரான தாக்குதலை எதிர்த்து பிரேரணை சமர்ப்பிக்கத் தீர்மானம்

ஜாதிக ஹெல உறுமய பிக்குகளுக்கு எதிராக கட்ட விழ்த்து விடப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவித்தும், சபையில் ஹெல உறுமய பிக்குகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்களுக்கு எதிராகவும் தனி நபர் பிரேரணை ஒன்றை சபையில் சமர்ப்பிக்க அந்தக் கட்சி உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். எதிர்வரும் 18 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்ற அமர்வின்போது, இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வண. உடுவே தம்மலோக தேரர் தெரிவித்தார்.

தர்ம உபதேசக் கூட்டங்களில் கல்விவீச்சுக்கள் இடம்பெறு வதாகவும், தொடர்ந்தும் ஹெல உறுமய பிக்குக்களின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல்கள் இடம்பெறுவதாகவும் தெரி வித்த அவர், இந்த ஜனநாயக விரோத செயல்களை வன்மை யாக கண்டிப்பதாகவும் தெரிவித்தார். பிரதி சபாநாயகர், சபை முதல்வர் தெரிவில் ஹெல உறுமயவின் நிலைப்பாடு குறித்து எதிர்வரும் 17 ஆம் திகதி கூடி ஆராய்ந்து தீர்மானிக் கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004 ஏப்ரல்

## இரசாயனவியல் II மாதிரி வினாத்தாள்

(நேற்றைய தொடர்ச்சி...)

மேலுள்ள தரவுகளைப்பயன்படுத்தி பகுதிகள் (i), (ii), (iii) எல்லாவற்றிற்கும் விடையளிக்க.

(i)வெப்பநிலை T இல

$P_{AB} = (P^0_A + P^0_B) - (P^0_A X_B + P^0_B X_A)$


என்பதை இரவோற்றின் விதிக்கோவைகளில் இருந்து நிறுவுக?

(ii) பின்வரும் மாறல்களை தெளிவாகக் காட்டுவதற்கு தரப்பட்ட வரிப்படங் களில் வரைபுகள் வரைக.

I. வரிப்படம் I இல் வெப்பநிலை T இல $X_A$ உடன $P_A, P_B, P_{AB}$ ஆகிய ஒவ்வொரு ஆவியமுக்கங்களின் மாறல்.

II.வரிப்படம II இல் வெப்பநிலை T இல் $X_R$ உடன் $P_R, P_S, P_{RS}$ ஆகிய ஒவ்வொரு ஆவியமுக்கங்களின் மாறல்.

N. B : வரிப்படம I, II இல் நிலைக்குத்து அச்சுக்களுக்கு சர்வசம அளவிடையை பயன்படுத்துக.




a) இந்த மாறல்களை இனங்காண ஒவ்வொரு வரைபையும $P_A, P_B, P_R, P_S, P_{AB}, P_{RS}$, என்பவற்றுள் எது என பெயரிடுக.

b) $P_A^0, P_B^0, P_R^0 P_S^0$ ஆகியவற்றையும் உரிய இடங்களில் குறித்துக் காட்டுக?


(iii) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியிலுள்ள வெற்றிடங்களை பொருத்தமான சொற்களை, எழுத்துக்களை பயன்படுத்தி நிரப்புக?

கரைசலொன்றின் வெப்பநிலை அதிகரிக்க அதன் நிரம்பலாவி அமுக்கம் அதிகரிக்கும் வீதம் ................................. . இது சாள்சின் விதியுடன் எதிர் பார்க்கப்படும் அமுக்க அதிகரிப்பிலும் ................................. திறந்த பாத்திரத்தில் மேற்படி கரைசலின் வெப்பநிலை அதிகரிக்க, கூடுகின்ற நிரம்பலாவி அமுக்கம் ஒரு போதும் ................................. அமுக்கத்தை விஞ்ச முடியாது.

தூய திரவம் S இன் வழமையான கொதிநிலையிலும் பார்க்க RS கரைசலின் கொதிநிலை எப்போதும் ................................. தூயதிரவங்கள் R, S இன் வழமையான கொதிநிலைகளிலும் பார்க்க RS கரைசலின் கொதிநிலை ........................ அல்லது ................................. இருக்கலாம். ஆனால் ஒரு போதும் ................................. இருக்கமுடியாது


RS கரைசலானது இலட்சிய நடத்தையில் இருந்து கணிசமான ................. விலகலொன்றை காட்டுகிறது. RS கரைசல் ஒன்றை பகுதிபடக்காய்ச்சி வடிக்கும் போது இறுதியில் நிச்சயமாக ................................. மாறாக் கொதிநிலைக்கலவை ஒன்று பெறப்படும்.

3. a) பின்வரும் கட்டமைப்புடைய சேர்வையின் IUPAC பெயரீட்டைத் தருக?





b) Y எனும் சேர்வை ஒன்று $C_3H_6O_3$ என்னும் மூலக்கூற்றுச் சூத்திரத்தை கொண் டுள்ளது.

Y ற்கு சாத்தியமான




எனும் கட்டமைப்பை கொண்ட 5 கட்டமைப்புக்களை வரைக. .................................

c) பென்சீன் ஆனது $CH_3Cl$, உலர் $AlCl_3$ உடன் புரியும் தாக்கத்தை கவனத்தில் கொள்க.




கீழுள்ள (i), (ii), (iii), (iv) ஆகிய கூற்றுக்களிலுள்ள ஒவ்வொரு அடைப்புக்குள் இருக்கும் பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடுக?

இத்தாக்கத்தில்


(i) பென்சீன் ஒரு {இலத்திரன் / கரு} நாட்ட {கூட்டல்/ பிரதியீட்டு} தாக்கமடைகிறது.

(ii) பென்சீனில $CH_3$ கூட்டம் இணைந்துள்ள C அணு ஒரு {இலத்திரன் / கரு} நாடியாக தாக்கம் புரிகிறது.

(iii) $CH_3Cl$ இன C அணு ஒரு {இலத்திரன / கரு} நாடியாக தாக்கம் புரிகிறது.

(iv) பென்சீனில $CH_3$ கூட்டம் இணைந்துள்ள C அணுவின் கலப்பு $sp^2$ இலிருந்து $\{sp/ sp^2/ sp^3\}$ ஆக மாறி பின் இறுதியில் $\{sp/ sp^2/ sp^3\}$ ஆக மாறுகிறது.

(d) கீழே பெட்டிகள் மூலம் காட்டப்பட்ட தாக்க ஒழுங்கினை கவனத்தில் கொள்க.





(i) பொருத்தமான பெட்டிகளில A, B, C, D, E, F ஆகிய சேர்வைகளின் கட்டமைப்புச் சூத்திரங்களை வரைக.

(ii) பொருத்தமான பெட்டிகளில் P, Q, R, S, T, U ஆகிய சோதனைப் பொருட்களை எழுதுக.

(iii) இறுதிப்படியான $E + F \xrightarrow{\text{ஐ NaOH}}$ தாக்கம் எவ்வாறு அழைக்கப்படுகிறது.

4. a) n - ஹெக்சேன் தொகுப்புக்கு இட்டுச் செல்லும் ஒழுங்கு பெட்டிகள் மூலம் காட்டப்பட்டுள்ளது.





(i) பொருத்தமான பெட்டிகளில் A, B, C ஆகிய சேர்வைகளின் கட்டமைப்புச் சூத்திரங் களை வரைக.

(ii) பொருத்தமான பெட்டிகளில P,Q ஆகிய சோதனை பொருட்களை எழுதுக?

b) $CH_4, C_2H_4, C_2H_2$ என்பவற்றில C அணுக்கள் முறையே $SP^3, SP^2, SP$ கலப்பாக் கத்தில் உள்ளன. கீழே கூடு A இல C இன் கலப்பில் ஈடுபடக்கூடிய வெளியோட்டு அணு ஒபிற்றல்கள் சக்தி அச்சு சார்பாக தரப்பட்டுள்ளன.

இங்கு ஒவ்வொரு சிறிய சதுரமும் ஒவ்வொரு ஓபிற்றலைக் குறிக்கும்.




கூடு A காபனணுவின் தரை நிலை

கூடு B

(i) கூடு A இல் உள்ளது போன்று சிறு பெட்டிகளைப்பயன்படுத்தி கலப்புக்கு பின் உள்ள $SP^3, SP^2, SP$ கலப்பு ஓபிற்றல்களையும் கலப்புக்கு முன் உள்ள 2S, 2P ஓபிற்றல்களையும் நிலைக்குத்து சக்தி அச்சு சார்பாக கூடு B இனுள் வரைக. ஓபிற்றல்களை வகைப்படுத்திக்காட்ட பெட்டிகளைப் பெயரிடுக?

காபோனியம் அயன்களில் உள்ள மையக்காபனின் கலப்பு வகை யாது?

.................................................................................................

(ii) பின்வரும் வசனங்களை அவற்றின் வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் பூரணப் படுத்துக.

I Cyclo hexane $C_6H_{12}$ இலுள்ள காபன் அணுக்கள ................................. கலப்பில் ஈடுபட்டுள்ளன.

II கலப்பில் ஈடுபட்ட ஓபிற்றல்கள் ............... பிணைப்பை உண்டாக்கமாட்டாது.

c) P, Q, R ஆகிய சேர்வைகள் அனைத்தும் மூலக்கூற்றுச் சூத்திரம் $C_4H_8O_3$ ஐ உடையன. இம்மூன்றும் ஒளியியல் சமபகுதிச் சேர்வைக் காட்டுவன. இம்மூன்றினுள் ஒன்றாயினும் மற்றொன்றின் ஒளியியல், சமபகுதிச்சேர்வையல்ல.

P, Q, R மூன்று சேர்வைகளும் $Na_2CO_3$ உடன் $CO_2$ ஐ விடுவிப்பனவும் ஒரு மூல் சேர்வை மிகை Na உடன் ஒரு மூல் ஐதரசன் வாயுவையும் உருவாக்கும்.

சோடாச்சுண்ணாம்புடன் வெப்பமேற்ற Q, R என்பன ஒரே சேர்வை S ஐ தரும்.

(i) கீழுள்ள பொருத்தமான பெட்டியில் P, Q, R, S ஆகிய ஒவ்வொரு சேர்வைகளுக்கும் சாத்தியமான கட்டமைப்புச் சூத்திரத்தை எழுதுக?

| சேர்வை | கட்டமைப்பு |
|---|---|
| P | |
| Q | |
| R | |
| S | |

(ii) P இனது ஒளியியல் சமபகுதியங்கள் இரண்டையும் முப்பரிமாண அமைப்பு வெளிக்காட்டப்படும் விதத்தில் கீழுள்ள கூடுகளில் வரைக?

| ஒளியியல் சமபகுதியம் I | ஒளியியல் சமபகுதியம் II |
|---|---|
| | |

### பகுதி B - கட்டுரை


இரு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

(a) (i) இணைந்த வாயு விதியை எழுதுக?

இவ்விதி எந்த வகையான தொகுதிக்கு பிரயோகிக்கப்படக்கூடியது?

(ii) $PV = \frac{1}{3} mN\bar{c}^2$ என்ற சமன்பாட்டிலிருந்து ஆரம்பித்து இணைந்த வாயு விதியை பெறுக?

(b) குமிழ்கள A உம் B உம் ஒரு குழாய் வாயில் மூலம் தொடுக்கப்பட்டன. ஆரம்பத் தில் குழாய் வாயில் மூடப்பட்டு இருந்தது. வாயு நிலையிலுள்ள $O_2$ ஐ மட்டும A உம் வாயு நிலையிலுள்ள எதீனை மட்டும். B உம் கொண்டுள்ளன. கீழுள்ள வரிப்படத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் ஒவ்வொரு வாயுவும் இருக்கிறது.




அதன் பின் குழாய் வாயில் திறக்கப்பட்டது. வாயுக்கள் நன்றாக கலக்க விடப்பட்டன. வெப்பநிலைகள் மாறாது தொடர்ந்தும் பேணப்பட்டது. வாயுக்கள் இலட்சிய நடத்தையுடையவை எனக்கொண்டு பின்வருவனவற்றை S.I அலகுகளில் கணிக்க? மேற்படி நிபந்தனையில் $C_2H_4$, $O_2$ இற்கிடையே தாக்கம் இல்லை என கொள்க?

(i) தற்போது குமிழ் A இல $O_2$ இன் பகுதி அமுக்கம்?

(ii) தற்போது குமிழ B இல $C_2H_4$ இன் பகுதி அமுக்கம்?

(iii) $C_2H_4$, $O_2$ இற்கிடையிலான மூல் விகிதம்?


(iv) $C_2H_4$, $O_2$ உம் சேர்ந்து வெடிக்கவைக்கப்பட்டு வெப்பநிலை மீண்டும 27°C இற்கு கொண்டு வரப்பட்டது. எஞ்சிய வாயுக்கலவையின் அமுக்கம் ( கலவை $CO_2 + O_2$)

(v) மேற்படி கணிப்புகளின் போது மேற்கொள்ளப்பட்ட எடுகோள்களில் 3 தருக.

(தொடரும்...)

K.சிவத்திரன் B.sc (Hons) ஆசிரியர் யா/இந்துமகளிர் கல்லூரி

## சீனாவின் உதவியுடன்
# புதிய அணுசக்தி ஆலையை பாகிஸ்தான் அமைக்கவுள்ளது!



பாகிஸ்தான் புதிய அணுசக்தி ஆலையை அமைக்க சீனா உதவ இருப்பதாக இரு நாடுகளும் அறிவித்துள்ளன. இந்த அணுசக்தி ஆலை பாகிஸ்தானின் வடக்கில் அமைக்கப்படவுள்ளது.

இஸ்லாமாபாத்தின் தெற்கேயுள்ள சாசிமா என்ற இடத்தில் அணுசக்தி ஆலை ஒன்று 2010 இல் நிறுவப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இது ஒரு சமாதானத்திற்கான ஆலையென பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

சீனாவின் உதவியுடன் ஸ்தாபிக்கப்படும் இரண்டாவது அணுசக்தி ஆலை இது எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த புதிய அணு ஆலை சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் தரத்தைக் கொண்டிருக்குமென தெரிவிக்கப்படுகின்றது.

சில நாட்களுக்கு முன்பு மூன்று சீன வேலையாட்கள் தென்மேற்கு பாகிஸ்தானில் நடந்த கார்க்குண்டில் கொல்லப்பட்டிருந்தனர். இருந்தாலும் பாகிஸ்தானும், சீனாவும் தமக்கிடையிலான பொருளாதார உறவைச் சீர்குலைக்கவில்லை என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இரு நாட்டின் அணுசக்தி ஆணைக்குழுவும் 600 மில்லியன் டொலர் பெறுமதியான ஆலையை அமைக்க கைச்சாத்திட்டன.

பி.பி.சியின் இஸ்லாமாபாத் செய்தியாளர் சபார் அபாஸ் இது தொடர்பாகத் தெரிவிக்கையில் -

பாகிஸ்தானின் அணு ஆயுதத்திட்டம் சர்வதேச அணு ஆலை சோதனைகளிற்கு திறக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் முதல் அணு ஆலை 1972 இல் கராச்சியில் - கனடாவின் உதவியுடன் அமைக்கப்பட்டது. இரண்டாவது அணு ஆலை 1990 இல் சாசிமாவில் சீனாவின் உதவியுடன் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிக்காசோவின் ஓவியம் 100 மில்.டொலர் ஏலத்தில்!



பிக்காசோ என்ற பிரபல்யமான ஓவியரால் 1905 ஆம் ஆண்டு வரையப்பட்ட ஓவியம் ஏலத்தில் 100 மில்லியனைப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

'பையன் சுங்கானுடன்' என்ற தலைப்பிலான இப்படமே உலகில் மிகப்பெரிய விலையில் விற்பனையாகவுள்ள ஓவியமென எதிர்பார்க்கப்படுகிறது.

காச்செட் என்பவரின் ஓவியமே இதுவரை மிகப்பெரிய விலையில் விற்கப்பட்ட ஓவியமாகும். 82.5 மில்லியன் அமெரிக்க டொலரில் விற்பனையான இந்த ஓவியத்தை விசின்ரி வான் கோஷ் என்பவர் வரைந்திருந்தார்.

1872 இல் வரையப்பட்ட மற்றரொரு குதிரைப்பந்தய ஓவியம் 20 மில்லியன் தொடகம் 30 மில்லியன் வரையிலான அமெரிக்க டொலருக்கு விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏல நிறுவனம் இது தொடர்பாகத் தெரிவிக்கையில் -

பிக்காசோவின் ஓவியம் கூடியளவு விலையான 70 மில்லியன் டொலருக்கு மதிப்பிடப்பட்டதாகத் தெரிவித்தது.

பிக்காசோ 'பையன் சுங்கானுடன்' என்ற ஓவியத்தை தமது 24 ஆவது வயதில் வரைந்தார். பாரசீக வேலைக்கார பையன் தனது இடதுகையில் குழலுடனும், தலையில் உரோசா முடியுடனுமாக காணப்படுகின்றான்.

பிரிட்டனுக்கான முன்னாள் தூதுவர் ஜோன் லைற்னி இந்த ஓவியத்தை 1950 இல் - 30,000 அமெரிக்க டொலருக்கு வாங்கினார்.

இந்த ஓவியம் கிறீன்ரிற் என்ற ஸ்தாபகரால் விற்கப்பட்டது. கிறீன்ரிற் என்ற ஸ்தாபனம் ஒரு நன்கொடையை மனிதாபிமான முறையில் கொடுக்கும் ஸ்தாபனமாகும். இதை லைற்றினியின் மனைவி பெற்சி தமது கணவரின் ஞாபகார்த்தமாக 1982 இல் ஸ்தாபித்தார்.




## பதவி விலகுமாறு
## ஜோர்ஜிய ஜனாதிபதி விடுத்த கோரிக்கை உள்ளூர் தலைவரால் நிராகரிப்பு!



ஜோர்ஜியாவின் மாநிலமான அஜரியாவில் உள்ளூர் தலைவர் ஒருவரை பதவியிலிலுருந்து விலகிக்கொள்ளுமாறு ஜோர்ஜிய ஜனாதிபதியினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால், மாநிலத்தின் தலைவரான அஷ்லன் சுபசிட்சி இக்கட்டளைக்கு அடிபணிய மறுத்துள்ளார்.

அஜரியா மாநிலத்தின் தலைநகர் பனாமியில் மக்கள் ஒன்றிணைந்து அரசிற்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

ஜோர்ஜ்ஜிய அரசின் அமைச்சர் ஒருவர் இம் மாநிலத்திற்குள் செல்லமுற்பட்டபோது சுபசிட்சிக்கு ஆதரவான படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

ஜோர்ஜியாவின் அஜரா மாநிலத்தை மற்றப் பகுதிகளிலிருந்து சொலோகி என்ற ஆறு பிரிப்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் அஜரா மாநிலத்திற்குள் நுழைவதற்கு ஜோர்ஜிய அதிகாரிகள் முற்பட்டவேளையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதனிடையே சென்ற ஞாயிற்றுக்கிழமை சுபசிட்சிக்கு ஆதரவானவர்கள் பாலத்தைக் குண்டுவைத்துத் தகர்த்திருந்தனர். ஜோர்ஜியாவின் அரசபடையினர் அஜரியா மாநிலத்திற்குள் பிரவேசிக்கலாம் என்ற காரணத்தினாலேயே பாலம் குண்டுத்தாக்குதல் மூலம் தகர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அஜரியா மாநிலத்தின உள்நாட்டுத் தலைவர் சுபசிட்சி தனது மாநிலத்தில் அவசர காலப் பிரகடனம் ஒன்றை மெற்கொண்டிருந்தார். இதன்பின்பு பாதுகாப்புப் படையினர் உள்ளே பிரவேசிப்பதற்கு முற்பட்டவேளையில் மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை ஜோர்ஜிய ஜனாதிபதி தெரிவித்த கருத்தில் - சுபசிட்சி மக்களுக்கு எதிராகத் துப்பாக்கிப் போராட்டத்தை நடத்த வேண்டாமெனக் கேட்டுள்ளார்.

இம் மாநிலத்தில் அதிகரித்துவரும் அமைதியின்மை தொடர்பாக உலகநாடுகள் தமது கருத்தினை வெளியிட்டுள்ளன.

## தேர்தல் நடைபெறவுள்ள நிலையில்
# பிலிப்பைன்ஸ் கருத்துக்கணிப்பில் தற்போதைய ஜனாதிபதி முன்னணியில்!

(மணிலா)

பிலிப்பைன்ஸில் நடாத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் தற்போதைய ஜனாதிபதி குளோரியா மக்கப்பக்கால் அறோயோ முன்னணியில் உள்ளதாக 'பிளஸ் ஏசியா' நிறுவனம் நடத்திய தெரிவித்துள்ளது.

இந்நிறுவனம் நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பில் அறோயோ 37 வீத வாக்கையும், திரையுலக நட்சத்திரம் பெர்னாண்டோ போயூனியர் 31 வீத வாக்கையும் பெற்றிருந்தனர். இதேபோன்ற வாக்கெடுப்பு சென்றமாதம் நடத்தப்பட்டபோது 3 வீதம் அறோயோ முன்னணியில் திகழ்ந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள் ஜனாதிபதியையும், செனற்றர்களையும், கொங்கிரஸ் தலைவர்களையும் மற்றும் உள்ளூர் ஆட்சிச்சபையின் உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்க இம் மாதம் 10 ஆம் திகதி வாக்களிக்க உள்ளனர்.

ஏப்ரல் 26 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதிவரை நடந்த இந்த அபிப்பிராய வாக்கெடுப்பில் 1200 பேர் கலந்துகொண்டார்கள்.

அறோயோ தொடர்ந்து ஆட்சியில் இருப்பார் என எண்ணப்படுகிறது. அவரின் ஆட்சிக் காலத்தில் அவர் அடைந்த வெற்றிகள் - குறிப்பாக சமூக மீள்கட்டமைப்பு கடந்த மூன்றுவருட ஆட்சியில் அவரை முன்னிலையில் திகழச்செய்துள்ளது.


முன்னைய பொலிஸ்மா அதிபர் 11 வீத வாக்கையும், முன்னைய கல்வித்துறைச் செயலாளர் நாயகம் ரவுல் றேகோ 7 வீத வாக்கையும், கிறிஸ்தவப் போதகர் எடி வில்லிய றொலைலா 5 வீத வாக்கையும் பெற்றார்கள் என பிளஸ் ஏசியா தெரிவித்தது.

தேர்தலை முன்னிட்டு பாதுகாப்புப்படை உசார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஆயுதபாணிகளால் இதுவரை 80 பேர் தேர்தல் பிரசாரத்தில் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால், முஸ்லிம் தீவிரவாதிகளாலும், கம்யூனிஸ்ட்டுகளாலும் குழப்பங்கள் வரலாம் என பீதிகள் நிலவுகின்றன.

முஸ்லிம் தீவிரவாதிகளான அபுசயாவால் தாக்குதல்கள் நடக்கலாம் என்றும், அதை எவ்வாறு தடுக்கவென தாம் ஆலோசிப்பதாகவும் பாதுகாப்புபடை அதிகாரி ஜெனரல் நர்சிசோ அபயா தெரிவித்தார்.

இதுவரை பலரை நாம் கைதுசெய்துள்ளோம். பல வெடிகுண்டுகளைக் கைப்பற்றியுள்ளோம்.



ஆனால், 100 வீத உத்தரவாதம் அளிக்க முடியாது என அவர் குறிப்பிட்டதாக ஏ.எவ்.பி தெரிவித்தது.

கொலைப்பயமுறுத்தல்களை அடுத்து ஜனாதிபதி குளோரியோ அறோயோ பிலிப்பைன்ஸின் தென்பகுதிக்கான தேர்தல் பிரசாரங்களை ரத்துச்செய்திருக்கிறார்.

# கிறீஸ் தலைநகரான எதென்சில் பொலிஸ் நிலையம்மீது தாக்குதல்



கிறீஸின் தலைநகர் எதென்சில் பொலிஸ் நிலையமொன்றில் மூன்று வெடிகுண்டுத்தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கு 100 நாட்களுக்கு முன்னர் இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் பொலிஸ் நிலையத்திற்கு சேதம் ஏற்பட்டதாகவும், பொலிஸ் அதிகாரி ஒருவர் சிறுகாயங்களுக்கு உட்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்தவொரு குழுவும் உரிமை கோரவில்லை ஆயினும் தீவிரப்போக்குள்ள இடதுசாரிக்குழுவொன்று இந்தச் சம்பவத்திற்குக் காரணமாக அமையலாமென தெரிவிக்கப்படுகின்றது.

கிறீஸ் தலைநகர் எதென்சில் இந்தவருடம் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்காக பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தாக்குதலுக்கு உள்ளான இரண்டு பொலிஸ் நிலையங்கள் எதென்சின் மத்திய பகுதியில் அமைந்துள்ளது. நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள அதிகாரிகளுக்கான விடுதிகள் இந்த மத்திய எதென்சில் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை நியூயோர்க், வோஷிங்ரன், பாலி, மட்றிட் ஆகிய பிரதேசங்களில் குண்டுத்தாக்குதல்கள் தீவிரவாதிகளினால் மேற்கொள்ளப்பட்டபின்னர் நடைபெறும் முதலாவது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி இதுவாகும். இதனால் கிறீஸின் பிரதமர் கொஸ்டாஸ் கறமன்லிஷ் இந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் அதிக கவனம் செலுத்தியுள்ளார்.

கடந்த காலங்களில் இடதுசாரிக் குழுக்களும், சில தீவிரவாத அமைப்புக்களும் கிறீஸில் குண்டுவெடிப்புக்கள் பலவற்றை நிகழ்த்தி பல படுகொலைகளுக்கும் காரணமாக அமைந்திருந்தன.

கடந்த நவம்பர் மாதத்தில் இந்தக் குழுவிற்கு எதிராக மேற்கொண்ட கைதுகளில் 19 அங்கத்தவர்கள் சிறைவைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பி.பி.சியின் ரிச்சட் கல்பின் தெரிவிக்கையில் -

ஒலிம்பிக் போட்டிகளை இந்த அமைப்புக்கள் எதிர்த்து வந்துள்ளன. அத்துடன் இந்தப் போட்டிகள் முதலாளித்துவ நாடுகளின் கேளிக்கைகள் எனவும், மேற்கு நாடுகளின் பாதுகாப்பு அமைப்புக்கள் எதென்ஸ் வருவதை விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கந்தப் பொல வன்முறைகளுக்கு தொண்டமான், எஸ்.பியே காரணம்

## ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

கந்தப் பொலவில் இடம்பெற்ற நிகழ்வுகளுக்கு முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி.திஸநாயக்காவும், ஆறுமுகன் தொண்டமானுமே காரணம் என ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

கந்தப்பொல நிகழ்வு குறித்து நேற்று தனது கருத்தைத் தெரிவித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது,

முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி.திஸநாயக்க, ஆறுமுகன் தொண்டமான் போன்றோர் தமக்கு ஆதரவான பொலிஸாரை மலையகப் பகுதியில் நியமித்திருந்தனர். இதுவே அப் பகுதியில் கலகம் நடைபெறக் காரணமாகும்.

இக் கலகம் இடம்பெற்றபோது, பொலிஸார் பக்கச் சார்பாக நடந்து கொண்டமை உண்மையே. அவர்கள் மீது விசாரணைகள் நடத்தப்பட்டு சரியான தண்டனை வழங்க பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

மலையகப் பகுதி அபிவிருத்திக்கென பல திட்டங்களை எமது அரசாங்கம் முன்வைக்கவுள்ளது. இதன் மூலம் தோட்டத் தொழிலாளர்கள் அதிக நன்மையை அடைவார்கள் என்று நான் நம்புகிறேன். மலையக மக்கள் சார்பாக நியமிக்கப்பட்ட சில தலைவர்களின் திட்டமிடாத செயல்களும், சுயநல எண்ணமுமே அந்த மக்கள் துன்பப்படக் காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கந்தப்பொல சம்பவத்தில் கொல்லப்பட்ட இரண்டு தமிழர்களினதும் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா பணம் ஜனாதிபதியால் நேற்று ஜனாதிபதி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டது. (01)

### பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள்

# தேசிய அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை!

இன்று ஆரம்பமாகும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் தேசிய அடையாள அட்டை பெற்றிராதோர் கடவுச்சீட்டையோ அல்லது தபால் திணைக்கள அடையாள அட்டையையோ பயன்படுத்த முடியும் என பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்று ஆரம்பமாகும் க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் தேசிய அடையாள அட்டையை வைத்திருத்தல் கட்டாயமானதெனக் கடந்த மாதம் பரீட்சைத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இம்முறை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் பலரது தேசிய அடையாள அட்டை வழங்கும் பணிகள் பூர்த்தியடையாமை தெரியவந்திருப்பதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்று ஆரம்பமாகும் க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு நாடு முழுவதிலும் உள்ள ஆயிரத்து எழுநூற்று 55 பரீட்சை நிலையங்களில் இரண்டு லட்சத்து நாற்பதாயிரத்துக்கும் அதிகமானோர் பரீட்சை எழுதவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# காணாமற்போன முதியவரின் சடலம் வாய்க்காலில் மீட்பு!

புங்குடுதீவில் கடந்த திங்கட்கிழமை காணாமற்போன முதியவரின் சடலம் நேற்று வாய்க்கால் ஒன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

புங்குடுதீவிலுள்ள 7 ஆம் வட்டாரம் - ஊதீவு என்ற இடத்திலேயே இந்த வயோதிபரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

நாகமுத்து இராசையா (வயது 75) என்பவரே கடந்த திங்கட்கிழமை முதல் காணாமற்போய் நேற்று சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது -

கடந்த திங்கட்கிழமை வீட்டிலிருந்து புறப்பட்ட மேற்படி வயோதிபர், மீண்டும் வீடு திரும்பவில்லை. இதன் காரணமாக இந்த முதியவரின் உறவினர்கள் இவரைத் தேடி வந்தனர்.

இதனையடுத்து நேற்றையதினம் வாய்க்கால் ஒன்றுக்குள் இருந்து முதியவரின் சடலத்தை அவரது மருமகள் கண்டுபிடித்தார்.

பின்னர் ஊர்காவற்றுறை பொலிஸாரின் உதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்ட சடலம், பிரேத பரிசோதனைக்காக சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த மரணம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (தீ)

### சமாதான முயற்சிகளை

# வெற்றிபெறச் செய்வதிலிருந்து ஐ.தே.க. பின்வாங்க முடியாது!

## பிரதி அமைச்சர் றோஹண திஸநாயக்க

சமாதான முயற்சிகளை வெற்றியடையச் செய்வதிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி பின்வாங்க முடியாதென்று பிரதி அமைச்சர் றோஹண திஸநாயக்க தெரிவித்தார்.

மாத்தளையில் வணக்கத்தலம் ஒன்றில் நடைபெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

சமாதான முயற்சியை ஆரம்பித்து வைத்த வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் அதனை முழுமூச்சாக முன்னெடுத்து சிறப்பான முறையில் வழிநடத்திய பெருமை ஐக்கிய தேசியக் கட்சியையே சாரும்.

சகல தரப்பினரதும் கருத்துக்களுக்கு மதிப்பளித்து நிரந்தர சமாதானத்தை உருவாக்க அரசாங்கம் எண்ணியுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி இடைநிறுத்திய இடத்திலிருந்து சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது.

இதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள், அரசாங்கம் ஆகியவற்றுடன் எதிர்க்கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## அர்ஜுன ரணதுங்க பிரதி அமைச்சராகிறார்

முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவரான அர்ஜுன ரணதுங்க இன்று சுற்றுலா மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் பிரதி அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சுப் பொறுப்புத் தனக்கு வழங்கப்படுதல் வேண்டும் என இவர் வலியுறுத்திக் கேட்டுவந்த போதிலும் நேற்றுமுன்தினம் நுவரெலியாவில் உள்ள ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் ஜனாதிபதியுடன் நடைபெற்ற பேச்சுக்களை அடுத்து இந்த அமைச்சுப்பதவியினை ஏற்க அர்ஜுன ரணதுங்க சம்மதம் தெரிவித்துள்ளார்.

### இராணுவச் சிப்பாய்..

கள இருவரையும் தாக்குவதற்குச் சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மேலும் இரு இராணுவச் சிப்பாய்களும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### யாழ்.சிறையிலிருந்த...

களவு, குற்றப்பணம் கட்டாமை போன்ற காரணங்களுக்காக சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை - மேலும் 9 கைதிகளுக்கு குறிப்பிட்ட சில குற்றங்களுக்காக மன்னிப்பு வழங்கப்பட்ட போதும், அவர்கள் வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படுவதால், தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது. (தீ)

### கடலில்...

சடலம், கடந்த மூன்று நாட்களாக தேடப்பட்டு வந்தது.

இந்த நிலையில் காணாமற்போனவரின் சடலம் நேற்று புங்குடுதீவு - 7 ஆம் வட்டாரப் பகுதியில் கரையொதுங்கியது.

இதையடுத்து ஊர்காவற்றுறை பொலிஸாரின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்ட சடலம், பிரேத பரிசோதனைக்காக சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணமடைந்த ஆசிரியர், நெடுந்தீவுப் பகுதியைப் பார்ப்பதற்கு தனது நண்பருடன் சென்றுவிட்டு யாழ்ப்பாணம் திரும்பிக்கொண்டிருந்த போதே மேற்படி பரிதாபகரமான சம்பவம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தொடரும் மழையால் இயல்பு நிலை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்றிரவு 9 மணியுடன் முடிவடைந்த 21 மணித்தியாலத்தில் யாழ்.குடாநாட்டில் 10.3 மி.மி மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் திருநெல்வேலியிலுள்ள அவதான நிலையம் தெரிவித்தது.

இலங்கைக்கு அண்மையாக தோன்றிய தாழமுக்கம் காரணமாக இந்தக் கோடை மழை பெய்தது. தாழமுக்கம் தற்போது அரபுக்கடல் வழியாக நகர்ந்துசெல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடத்தில் இதுவரை 259.1 மி.மி மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் காலநிலை தொடர்ந்து நீடிப்பதுடன், வெள்ள அபாயம் ஏற்படுவதற்கும் வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் இந்த எச்சரிக்கையை நேற்று விடுத்தது.

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் தற்போது ஏற்பட்டிருக்கும் தாழமுக்கம் இலங்கையின் வடமேல் கடற்பரப்பிற்கு நகர்ந்துள்ளது.

இந்தத் தாழமுக்க நிலை மேலும் விரிவடையலாம் என எதிர்பார்க்கப்படுவதால், நாட்டில் மேற்கு சப்ரகமுவ, தெற்கு, வடமேல், மத்திய மாகாணங்களில் காற்றுடன்கூடிய மழைபெய்யும் சாத்தியம் இருப்பதாகவும் -

இலங்கையை அண்டிய கடற்பகுதி கொந்தளிப்பாக இருப்பதுடன், இலங்கையின் முழுப் பிரதேசத்திலுமே மழைபெய்வதற்கான வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டின் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளப்பெருக்கும், மத்திய மலைநாட்டுப் பகுதியில் மண்சரிவும் ஏற்படுவதற்கு வாய்ப்புத் தோன்றியிருப்பதாகவும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## விட்ட இடத்திலிருந்து...

உறுப்பினர்கள் ஆகியோருடன் தாம் நடத்திய பேச்சுக்களின் விபரங்களை சொல்ஹெய்ம் சுருக்கமாக எடுத்து விளக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கொழும்பில் தங்கியிருந்த காலப்பகுதியில் சொல்ஹெய்ம் இரண்டுமுறை இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிருபம் சென்னைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி சந்திரிகா, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தான் நடத்திய பேச்சு விபரங்களை சொல்ஹெய்ம் நிருபம்சென்னுக்கு விளக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிற்கு கடந்த சனிக்கிழமை வந்த சொல்ஹெய்ம் இங்கு பல்வேறு தரப்பினருடனும் நடத்திய பேச்சுக்களின் விபரங்கள் தொடர்பாக இந்தியத் தலைவர்களுக்கு விளக்குவதற்காக நேற்றிரவு புதுடெல்கிக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### மிதிவெடியில்...

வத்தினரால் கைவிடப்பட்ட காவலரணுக்கு அண்மையிலிருந்த காணி ஒன்றில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன.

இதையறிந்திருந்தும் அந்தக் காணியைத் துப்பரவு செய்வதற்கு உரிமையாளரின் உறவினர்கள் முற்பட்டனர்.

மூன்றுபேர் காணியைத் துப்பரவு செய்வதற்கு தாம் தயார் என்றும், ஒப்பந்த அடிப்படையில் இதற்கு 16 ஆயிரம் ரூபா தருமாறும் கேட்டனர்.

பின்னர் வறுமையின் கொடுமையால் நான்காயிரம் ரூபாவுக்காக இந்தக் காணியைத் துப்பரவு செய்வதற்கு அந்த மூன்று பேரும் இணங்கினர்.

நேற்றுக் காணியைத் துப்பரவு செய்துகொண்டிருந்தபோது அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த ஏழு மிதிவெடிகளை இவர்கள் மீட்டனர்.

அவற்றை நிலத்தில் வைத்துவிட்டு காணியைத் துப்பரவாக்கிக் கொண்டிருந்தபோது மிதிவெடிகள் மீது மண் கொட்டப்பட்டது.

இதையறியாமல் காணியைத் துப்பரவுசெய்துகொண்டிருந்த அளவெட்டி வடக்கு - கலைமகள் வீதியைச் சேர்ந்த நாகமுத்து சிவலிங்கம் (வயது 36) என்பவர் நேற்று நண்பகல் 12 மணியளவில் மிதிவெடி ஒன்றின் மீது காலை வைத்துள்ளார்.

அப்போது அது வெடித்ததால் மேற்படி குடும்பஸ்தர் தனது கால் பாதத்தை இழந்தார். இவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையின் அவ்சர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

### சொல்ஹெய்முக்கு...

ஹெய்ம் நோர்வேக்குத் திரும்பவுள்ளார். தனது திருமண ஏற்பாடுகளை கவனிப்பதற்காகவே இவர் நாடு திரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.